www.padippakam.com


# புதிய பார்வை

பார்வை - 10 மாசி - 1992


## அகதிகள் மீளக் குடியமர்த்தப்படவில்லை; இந்தியாவிலிருந்து அகதிகள் மீளவருகை

# குடாநாட்டில் தாக்குதல் நடக்குமா?

வடக்குக் கிழக்கில் புலிகளின் அரசியல் வறுமையாலும், சாணக்கியமற்ற ஆயுத நடவடிக்கைகளாலும் இராணுவத்தினர் முன்னேறி இனஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் தினம் தினம் மக்கள் அகதிகளாகிக் கொண்டிருக்கும் இவ் வேளையில், இந்தியாவிலிருந்தும் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளின் விளைவுகளால் அகதிகள் திருப்பி அனுப்பப் படுகிறார்கள். ஊரடங்கின் மத்தியில், இராணுவச் சுற்றி வளைப்புக்குள் அகப்பட்டிருக்கும் குடாநாட்டு மக்கள் எப்போ தாக்குதல் நடக்கும்? எப்போ நம் உயிர் போகும் எனப்பயந்த வண்ணம் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கின்றனர்.

வடக்கு கிழக்கில் அகதிகளாகி போன மக்கள் குடியமர்த்தப்படாமல் நிவாரணப்பொருட்கள் ஒழுங்காக வழங்கப்படாமல் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். தொடர்ந்து வரும் அர்த்தமற்ற யுத்தத்தால் சாவுகள், இழப்புக்கள், பசிபட்டினிகள் தொடர்ந்த வண்ணமுள்ளன. தொடர்ந்தும் மக்கள் அகதிளாகிக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் இந்தியாவிலிருந்து அகதிகள் திருப்பி அனுப்பப்படுகிறார்கள். புலிகள் ஏகாதிபத்திய கைக்கூலிகளாக தமிழ்நாட்டில் மேற்கொண்ட பயங்கரவாத நடவடிக்கைகளாலேயே இந்நிலை தோன்றியுள்ளது. உதவி வழங்கும் நாடுகளின் முன்னால் வடக்கு கிழக்கில் அமைதி நிலவுகிறது என்ற நாடகத்தை நடாத்த தனக்கு சாதகமாக இலங்கை இவ்வகதிகள் வருகையை கையாண்டுள்ளது.

இந்தியா முதற்கட்ட நடவடிக்கையாக விரும்பித் திரும்பும் அகதிகளை அனுப்ப உள்ளது. திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த 3700 பேரும், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 13500 பேரும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 6000 பேரும் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இவர்களின் முதல் வருகையில் 192 குடும்பங்களைச் சேர்ந்த 616பேர் எம். டி. அக்பர் என்னும் கப்பல் மூலம் திருகோணமலை வந்தனர். இவர்களின் தேவைகளை கவனிக்க ஈ.பி.ஆர். எல். எவ். பாராளுமன்ற உறுப்பினர்களான தோழர்கள். குகனேஸ்வரன், இம்மானுவல் சில்வா, நவரத்தினம் ஆகியோர் திருகோணமலை சென்றிருந்தனர். இரண்டாவது தடவையாக 659பேர் திருகோணமலை வந்தனர்.

நாலாபக்கங்களிலும் இராணுவ, கடற்படையினரால் சூழப்பட்டு குடாநாட்டுக்குள் மக்கள் சிறைவைக்கப் பட்டுள்ளார்கள். எந்நேரமும் தாக்குதல் நடக்கலாம் எனமக்கள் அஞ்சி அஞ்சி உயிர் வாழ்ந்த வண்ணமுள்ளனர்.

### தேங்கிக் கிடக்கும் சின்னவெங்காயம்

குடாநாட்டில் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் செய்கை பண்ணப்பட்ட சின்ன வெங்காயம் அந்தர் 500ரூபாவுக்கும் வாங்குவோரில்லாமல் தேங்கிக்கிடக்கிறது. முன்னர் ஒரு கிலோ 150 ரூபாவுக்கு விற்கப்பட்டது. வெங்காயத்தை கப்பலில் அனுப்ப உதவி நிறுவனங்கள் முயன்று வருகின்றன.

### புலிகள் வெளியேற்றம்

குடாநாட்டை படையினர் கைப்பற்றி விடுவர் என்றபீதியில் ஏனைய இடங்களில் உள்ள புலிகளை குடாநாட்டுக்கு வருமாறு பணிக்கப்பட்டுள்ளனர் அதேவேளை புலிகளின் உயர்மட்ட அங்கத்தவர்கள், தலைவர்கள் அனைவரும் முல்லைத்தீவு, உடையார்கட்டுப்பகுதிக்கு சென்றுவிட்டதாக தெரிய வருகிறது.

### பலாலியில் பதட்ட நிலை

பலாலி இராணுவ முகாம் பகுதிக்கு பாரிய விமானங்கள் வருவதும் போவதுமாக பயப்பீதியை ஏற்படுத்திய வண்ணம்உள்ளன. இராணுவத்தினர் அடுத்தகட்ட நடவடிக்கைக்கு தயாராகிக் கொண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் பலாலி இராணுவ முகாமை அண்டியுள்ள பகுதிகளில் உள்ள மக்கள் இடம் பெயர்ந்த வண்ணமுள்ளனர்.

இதேவேளை நான்கு பிரிகேடியர் அடங்கிய

(இரண்டாம் பக்கம் பார்க்க........)

## வெட்கக்கேடான விடயத்தில் முதலிடம்

காணாமல் போனோர் தொடர்பாக ஐ.நா. செயற்பணிக்குழு ஆய்வுக்கு உட்படுத்திய நாற்பது நாடுகளில், இலங்கையில்தான் அதிகமானோர் காணாமல் போயுள்ளனர். நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நடைமுறைப்படுத்தாத (நடைமுறைப்படுத்த விரும்பாத) மனிதஉரிமைகள் மீறப்படும் வெட்கக்கேடான விடயத்தில் இலங்கை முதலிடத்தை தட்டிக்கொண்டுள்ளது. இராணுவம், பொலிஸ் மற்றும் கொலைக் குழுக்கள் மேற்கொண்ட கொலைகள் மற்றும் மனிதஉரிமை மீறல்களின் காரணமாக 1983 ஆம் ஆண்டுமுதல் 12,000 பேர் காணாமல் போயுள்ளனர் என்பதை சான்றுகள் காட்டுகின்றன. கடந்த அக்டோபரில் இலங்கைக்கு விஜயம் செய்த இக்குழு தயாரித்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

## இந்திய ஜனாதிபதியை கொல்ல புலிகள் முயற்சி

தமிழ்நாடு திண்டுக்கல் அருகிலுள்ள காந்தி கிராமத்திலுள்ள பல்கலைக் கழகத்திற்கு வருகைதர இருந்த இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமனைக் குண்டுவைத்து கொலை செய்ய புலிகள் மேற்கொண்ட பயங்கரவாத நடவடிக்கை தோல்வியில் முடிந்தது.

பல்கலைக் கழகத்தில் கூலிவேலை செய்யும் பாலநாகம்மாள் என்ற பெண்ணை அணுகிய புலிகள் 'எங்களிடம் உருண்டையாக ஒருபொருள் இருக்கிறது. அதை நாங்கள் சொல்லும் இடத்தில் புதைக்க வேண்டும். நாங்கள் பணம் தருகிறோம். 'என்றுகூறி கத்தைகத்தையாக ரூபா நோட்டுக்களை காட்டியுள்ளனர். பாலநாகம்மாள் மறுத்தபோது கத்தியைக்காட்டி மிரட்டியுள்ளனர்.

வந்தவர்கள் யாழ்ப்பாணத் தமிழில் பேசியதால் புலிகள் என்றும், அவர்கள் வைக்கச் சொன்ன பொருள் வெடிகுண்டு என்றும், அவர்கள் வெடிகுண்டு வைக்குமாறு கூறிய இடம், பல்கலைக் கழகத்திற்கு வருகைதர இருந்த இந்திய ஜனாதிபதி ஓய்வெடுக்க இருந்த பல்கலைக் கழக துணைவேந்தர் மாளிகை என்றும் புரிந்து கொண்டு வீட்டுக்குள் ஓடி வந்து கதவைப் பூட்டிவிட்டு பாலநாகம்மாள் கணவரிடம் நடந்தவைகளைக் கூறியுள்ளார்.

கணவன் பல்கலைக் கழக நிர்வாகத்திடம் தெரியப் படுத்தியதைத் தொடர்ந்து பொலிசார் ஸ்தலத்துக்கு விரையவே, நிலைமையைப் புரிந்து கொண்ட புலிகள் தப்பிவிட்டனர். புலிகள் மீண்டும் மீண்டும் தாம் சர்வதேச பயங்கரவாதிகள் என்பதை நிரூபித்து வருகின்றனர். புலிகளின் சாணக்கியமற்ற இதுபோன்ற நடவடிக்கைகளால் தமிழ் நாட்டிலிருந்து நாம் துரத்தப்படுகிறோம் என தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்துள்ள அகதிகள் குமுறுகின்றனர்.

## 50 ஆசிரியர்களுக்கு மரணதண்டனை

தமிழ்பேசும் மக்கள் மத்தியில் தமக்கெதிராக எழும் எதிர்ப்புகளை ஆயுதம் கொண்டு அடக்க வேண்டிய தேவை இருக்கும் யதார்த்த நிலைமையினால் ஆயுதங்களைக் கீழேபோட மாட்டோம் என்று வலியுறுத்தி வரும் புலிகளின் தலைவர்கள், தம்மைப் பற்றியும், தம்மை வாழ்த்தியும் பாடநெறிகளை வகுத்து பாடசாலைகளில் கற்பிக்கத் தவறிய ஐம்பது ஆசிரியர்களுக்கு மரணதண்டனை விதித்துள்ளனர். அத்துடன் மாணவர்கள் ,கட்டாயம் தமிழீழ ராஜ்ஜியம் என்னும் பாடம் கற்க வேண்டும் என்று புலிகளின் தலைவர்கள் குடாநாட்டில் கட்டளைகள் பிறப்பித்துள்ளனர் என செய்திகள் தெரிவிக்கின்றன.



பிரேமதாசாவின் தில்லு முல்லு

**எமது மக்களுக்கு அமைதி, சமாதானம், சமத்துவம், ஜனநாயகம் கிடைக்கும்வரை நாம் இறுதி வரை உறுதியுடன் போராடுவோம்**

படிப்பகம்

www.padippakam.com



# எமது பார்வையில்

ஸ்ரீ லங்கா அடக்குமுறை அரசாங்கத்தின் இனவாத நடவடிக்கைகளையும், ஜனநாயக விரோத செயற்பாடுகளையும் துணிச்சலுடன், தனித்த ஒரேயொரு தமிழ் அரசியல் கட்சியாக எதிர்த்து நிற்பதன் காரணமாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் இன்று மிகமோசமான அரச பயங்கரவாதத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

மக்களின் விடியலுக்காய் செயற்பட்ட நாம் கடந்த சில ஆண்டுகளாய் பெரும் இழப்புக்களுக்கு உள்ளானோம். இருந்த போதிலும் இழப்புக்களினால் துவண்டு விடாது... வெறுமனே எமது இருப்பை மாத்திரம் காப்பாற்றிக் கொள்ளும் சந்தர்ப்பவாத அரசியலில் நாம் ஈடுபட்டதில்லை.

இதர தமிழ் அமைப்புக்கள், ஏன் விடுதலைப் புலிகளும் கூட பிரேமதாசாவின் இனவாத அரசுடன் நேரடியாகவும், மறைமுகமாகவும் உறவுகளைத் தொடர்கின்ற வேளையில், எமது பொது எதிரி யார் என்பதை அடையாளம் கண்டு கொள்வதிலும்... அந்தப் பொது எதிரியான ஸ்ரீ லங்காஇனவாத அரசுக்கு எதிராக எமது நடவடிக்கைகளை வகுத்துக் கொள்வதிலும் நாம் தெளிவாக உள்ளோம். எம்மை தம்வசப்படுத்துவதற்கான சகல வழிமுறைகளையும் ஸ்ரீ லங்கா அரசு முயற்சித்தது. படையினர் மூலமான தனது பயங்கர வாதத்தையும், கைக்கூலிகள் மூலமாக தனது பலாத்காரத்தையும் எம் மீது பிரயோகித்தது. அரச செய்தி நிறுவனங்கள் புலிகளின் ஊதுகுழல்களுடன் போட்டிபோட்டு எம்மீது அவதூறுகளை வாரி இறைத்தன.

இருந்த போதிலும் பொது எதிரியை அம்பலப்படுத்தும் எமது நடவடிக்கைகளை நாம் கைவிடவில்லை. தமிழ்பேசும் மக்களுக்கு எதிரான இந்த அரசின் மிலேச்சத் தனமான இராணுவ நடவடிக்கைகளை உலகஅரங்கில் பகிரங்கப் படுத்தினோம். வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ்பேசும் மக்கள் அனுபவித்து வரும் துன்பங்களை சிங்கள மக்களுக்கு தெரியப்படுத்தினோம். அரசபடைகளால் கைது செய்யப்பட்டு கொல்லப் பட்டவர்கள்... காணாமல் போனவர்கள்... பாதிக்கப் பட்டவர்கள் பற்றிய விபரங்களை திரட்டி சர்வதேச மனிதஉரிமை அமைப்புகளுக்கு வழங்கி அதன் மூலம் ஸ்ரீ லங்கா அரசுக்கு நெருக்குவாரத்தை ஏற்படுத்தினோம். அகதிமுகாம்களில் அல்லல் படுபவர்களுக்கு எம்மால் இயன்ற உதவிகளை வழங்கினோம்.

அதைவிட அனைத்து மக்களுக்கும் எதிரான பிரேமதாசா அரசின் அடக்குமுறைகளை எதிர்த்து நிற்பதிலும் இந்த அரசின் மக்கள்விரோத நடவடிக்கைகளை பகிரங்கப் படுத்துவதிலும் தென்னிலங்கையின் முற்போக்கு அமைப்புகளுடன் இணைந்து செயற்பட்டு வருகிறோம். இன்று பொதுஎதிரிக்கெதிராக வெகு முனைப்பாக இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட்டுவந்த எமது அமைப்பின் முன்னணித் தோழர்கள் மிகமோசமான அரச பயங்கர வாதத்துக்கு உள்ளாகி உள்ளார்கள்.

இலக்கத் தகடுகள் அற்ற வாகனங்களில் வரும் இராணுவத்தினரால் காரணங்கள் கூறப்படாது எமது தோழர்கள் கைது செய்யப் படுகிறார்கள்... காவலில் வைக்கப் படுகிறார்கள்... காணாமல் போகிறார்கள்... அரச கைக்கூலிகளால் எமது தோழர்கள் மூர்க்கத்தனமாக தாக்கப்படுகிறார்கள். ஸ்ரீ லங்கா இனவாத அரசின் இனவிரோத, மக்கள் விரோத, பயங்கர வாத நடவடிக்கைகளை எதிர்த்து நிற்கும் காரணத்தாலேயே எம்மீது இத்தகைய கொடூரங்கள் நிகழ்த்தப் படுகின்றன.

எமக்கு இழைக்கப்படும் இந்தக் கொடுமைகள் மூடிமறைக்கப் படுகின்றன. ஜனநாயகம் பற்றியும் மனிதஉரிமைகள் பற்றியும் பக்கம் பக்கமாக எழுதுகின்ற எமது சஞ்சிகையாளர்கள் இந்த அராஜகங்களை கண்டு கொள்வதில்லை. தங்கள் சித்தாந்த ஞானத்தை காட்டுவதற்காக சஞ்சிகை வெளியிடுபவர்களும் இவைகுறித்து அலட்டிக் கொள்வதில்லை. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தொடர்பான தமது தனிப்பட்ட காழ்ப்புணர்வுகளை வெளிப்படுத்தவே பலவித்தகர்கள் விரும்புகிறார்களே ஒழிய, அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் துணிச்சலுடன் நிற்கும் தனித்த தமிழ் அமைப்பான எமக்கு வலுவைச் சேர்க்க அல்ல.

இருந்த போதிலும் அடக்குமுறை அரசினாலும், பாசிசப் புலிகளாலும் எமக்கு இழைக்கப்படும் கொடுமைகளை நாம் உங்கள் முன் வைக்கிறோம். அடக்குமுறையாளர்களிடம் மண்டியிட மறுத்ததாலும், பொது எதிரிக்கு எதிராக துணிச்சலுடன் போராடுவதாலும்தான் இந்தக் கொடுமைகள் எங்களுக்கு இழைக்கப்படுகின்றன என்பதை அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

எமதுதோழர்கள் இன்று எண்ணற்றதுன்பங்களை அனுபவித்தாலும் அவர்களது செயற்பாடுகள் மக்களுக்கானவை. எமதுஅமைப்பு தூரநோக்குடனான பார்வையுடன் எம்மக்களின் விடியலுக்காகவே உழைக்கிறது... உழைக்கும்.

# அகதிகள் மீளக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.....)

உயர்மட்டக் குழுஒன்று யாழ்ப்பாணம் சென்று திரும்பியுள்ளது. இதனைத் தொடர்ந்து தென் பகுதியிலிருந்து மேலும் இராணுவத்தினரையும், இராணுவ தளபாடங்களையும் அனுப்பும் பணி அதிகரித்துள்ளது.

## எந்நேரமும் தாக்குதல் நடக்கலாம்.

எந்நேரத்திலும் தாக்குதல் நடத்தக் கூடிய நிலையில் படையினர் இருப்பதாக தெரிவித்த யாழ் பிரிகேடியர் விமலரட்ன, யாழ் மருத்துவ மனையில் புலிச்சிறுவர்கள் ஊனமுற்ற நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும், புலிகளில் பலர் வெளிநாடுகளுக்கு ஓடிவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இதே வேளை குடாநாட்டிலிருந்து மக்களை வெளியேறுமாறு துண்டுப் பிரசுரம் மூலம் படையினர் கேட்டு வருகின்றனர் என கூட்டுப் படை தலைமையக தளபதி ரணசிங்கா தெரிவித்துள்ளார்.

## சவப்பெட்டி விநியோகம்.

குடாநாட்டிலுள்ள அனைத்து புலிகளின் தளங்களுக்கும் புலிகளின் உபதலைவர்கள் 5000 சவப்பெட்டிகளை கொள்வனவு செய்து விநியோகித்து வருகின்றனர் என ராயட்டர் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. எவ்வளவோ ஆசைகளை அடக்கிக் கொண்டு கையில் துப்பாக்கியுடன், கழுத்தில் சயனைட்டுடன், சவப்பெட்டிகளுக்கு முன்னால் சிறுவர்கள் சாவை எதிர்நோக்கி உள்ளனர்.

# வடக்குகிழக்கு இராணுவகட்டுப்பாட்டில்

இந்தியாவிலிருந்து திரும்பும் அகதிகளை, இலங்கை அரசு வடக்குக்கிழக்கில் இராணுவக்கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களிலேயே குடியமர்த்த உள்ளது. திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், வவுனியா ஆகிய பகுதிகள் இராணுவக்கட்டுப்பாட்டில் உள்ளன எனப் புலிகளின் பிரதித்தலைவர் மாத்தையா தெரிவித்துள்ளார். குடாநாட்டுக்கு வந்திருந்த கிறிஸ்தவப் பாதிரியார் குழுவை மாத்தையா சந்தித்த போது, தீவுப்பகுதிகளை தமது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு வடமாகாணத்தையே கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக அரசதரப்பினர் கூறுகின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

# சொல்லவும் வெட்கமடா

லலிதமானவரிக்கும் மனைவிக்கும் வெளிநாடுகளுக்கு செல்ல முடியாதவாறு கடவுச்சீட்டுக்களை ரத்து செய்யுமாறு அன்புத்தாசர் உத்தரவிட்டுள்ளராம் அதிதிருப்தியாளர்களின் குடியுரிமைகளைப் பறிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றனவாம். இதற்கு 2/3 பெரும்பான்மை பாராளுமன்றத்தில் தேவையாதலால் மண்டையை குழப்பும் அன்புதாசர் எதிர்கட்சிகளிலிருந்து, தமிழ், முஸ்லிம் கட்சிகளிலிருந்து யார் யாரை விலைக்கு வாங்கலாம் என கணக்குப் போட்டுக்கொண்டிருக்கிறாராம். இதனைச் சாக்காக வைத்து தங்களை தங்கவைத்துக் கொள்ளமுனையும் சில கட்சி பிரமுகர்கள் ஜனாதிபதி மாளிகையில் பாடுகிறார்கள். நீங்கள் நல்லாயிருக்கோணும் நாடுபின்னேற

நான் ஒவ்வொருநாடாகப் பார்த்தே தீருவேன் என ஒற்றைக்காலில் நிற்கும் உலகம் சுற்றும் வாலிபனான கிருஷ்ண பரமாத்மா திடீரென சுவிசிலிருந்து காணாமல் போய்விட்டாராம். அதேவேளை வடஇந்தியாவில் மாவீரர்கள் நடாத்திய பணம் மாற்றும் நிலையத்தை கைப்பற்றிய பொலிசார் சுவிசிலிருந்து கிருஷ்ணபரமாத்மா பணம் அனுப்பியதை ஊர்ஜிதப்படுத்தியதை தொடர்ந்து சுவிஷ் அரசு கிருஷ்ண பரமாத்மாக்கு நெருக்கடி கொடுத்ததை தொடர்ந்து டென்மார்க்குக்கு கள்ளத் தோணியாகப் புறப்பட்ட கிருஷ்ணபரமாத்மா பாடுகிறார் உலகம்- -உலகம்- அழகுக் கலைகளின் சுரங்கம் காலமே ஓடிவா- - - -

நானூறு வாக்குகளையே பெற்று தமிழ் மக்களால் தூக்கி எறியப்பட்ட தனிக்கட்சி நடாத்தும் பருத்த நெடினமான அரசியல்வாதி வருமானத்துக்கு மாவீரர்களையே நம்பியிருந்தார். இவரின் புகழாரத்தின் அளவை பொறுத்தே சன்மானத் தொகையும் இருந்ததாம். தமிழகஅரசின் தற்போதைய தடா- -தடா- - - வினால் கதிகலங்கிப்போயுள்ள நெடினமானவரின் வயிற்றில் அடிவிழுந்துள்ளதாம். இதனைத் தொடர்ந்து வெளிநாடுகளில் மாவீரர்களுக்கு ஆதரவு திரட்ட போகிறேன் என்றுபுறப்பட்டு தனக்கு வருமானம் தேடக் கிளம்பியவருக்கு லண்டன் விசா மறுக்கப்பட்டாதாம். எதிர் பார்த்த வருமானம் வெளிநாடுகளில் கிடைக்காததால் தன் புலுடா இனிப்பலிக்காது எனத் தெரிந்து கொண்டு தடாவின் பயமுறுத்தலால் ஜேர்மனியில் தஞ்சம் கோரியுள்ள நெடினம் மனமுடைந்து போயுள்ளார். ஐரோப்பிய மாவீரர்கள் " தோல்வி நிலை என நினைத்தால் மனிதன் வாழ்வை நினைக்கலாமா " எனத் தேற்றுகிறார்களாம்.

மலையகம் அம்மான் இன்றுவருவார் நாளைவருவார் எங்கள் அழிந்து கொண்டிருக்கும் வாழ்வு மீண்டும் மலரும் என வழிமேல்விழிவைத்துக் காத்திருந்து ஏமாந்து போன மாவீரர்கள் குடாநாடு சென்ற பாதிரியார் குழுவை குண்டுக் கட்டாக பிடித்து பேச்சுவார்த்தைக்கு தூதுபோ செல்லக்கிளியே என்று அனுப்பி வைத்தார்களாம். அவர் வரத்தாமதமானவுடன் வா - - - வா- - -வா--- நீ சொல்லுமிட மில்லாம் நாங்கள் வருவோம் வா வா வா என அழைக்கிறார்களாம். மாவீரர் நடாத்தும் தொடர்நாடகத்தில் மலையக அம்மான் காட்சி முடிந்து திரைச்சீலை விழுந்துவிட்டதாம் இப்போது பாதிரியார் குழு காட்சி ஆரம்பமாகியுள்ளதாம்.

படிப்பகம்

www.padippakam.com



# மனித உரிமை மீறல்கள்

**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமும், யாழ்/மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தோழர். க. பிரேமச்சந்திரன் (சுரேஷ்) அவர்கள், 23.01.1992 அன்று பாராளுமன்றத்தில், மனிதஉரிமை மீறல்கள்; சிறையில் வாடும் இளைஞர்கள்; இந்திய அகதிகள் வருகை ஆகிய விடயங்கள் பற்றி ஆற்றிய உரையிலிருந்து.......**

'மனிதஉரிமை மீறல்கள் யாவற்றையுமேநாம் நிறுத்திவிடவேண்டும்' என்றுஇந்த அரசாங்கம் தொடர்ச்சியாக கூறிக்கொண்டு வருகின்றது. இனிமேல் இத்தகைய சம்பவங்கள் எதுவும் நடைபெறாது என்று மீண்டும் மீண்டும் கூறிய போதிலும் கூட, மனிதஉரிமைகள் மீறல் என்பது தொடர்ச்சியான ஒரு கதையாக இருந்து வருகிறது. முக்கியமாக டிசெம்பர் 17ஆம் தேதிகௌரவ ரணில் விக்கிரமசிங்ஹ அவர்கள், இனிமேல் இங்கு மனித உரிமை மீறல்கள் நடைபெறமாட்டாது என்று பகிரங்கமாக அறிவித்தார். சிவில் உடையில் வந்து யாரையும் இங்கு கைது செய்யமாட்டார்கள், பொலிஸாரே இவற்றை கவனிப்பார்கள் என்றும் அவர் கூறிய போதிலும் இங்கே கைது செய்தல் என்பது தொடர்ச்சியாக நடைபெறுகின்ற ஒரு விடயமாக இருக்கிறது.

1990ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14ம் திகதி இச்சபையின் கௌரவ உறுப்பினரான-வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான-திரு இராஜா குகனேஸ்வரன் அவர்களின் மெய்ப்பாதுகாப்பாளரும் ஜீப் சாரதியுமான திருவாளர்கள் அலெக்ஸாண்டர் ஐயாத்துரை, பஞ்சலிங்கம், நாகதீபம் ஆகியோர் இனந்தெரியாத நபர்களால் கொழும்பில்வைத்து கைது கைது செய்யப் பட்டனர். இது தொடர்பாக இச்சபையிலே நாங்கள் மீண்டும் மீண்டும் கேட்டபொழுது, அப்பொழுது பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக இருந்த ரஞ்ஜன் விஜேரத்ன அவர்கள், தாம் இது தொடர்பாக இச்சபையிலே விபரங்களை அறிவிப்பதாக தெரிவித்தார்.

ஆனால் இதுதொடர்பாக எந்தவிதமான பதிலும் இச்சபையிலே தெரிவிக்கப் படவில்லை

கொழும்பிலே வைத்து இனந்தெரியாத நபர்களால் கடத்தப் பட்டார்.

அதன் பின்பு இம்மாதம் -அதாவது ஜனவரி மாதம் 21ம் திகதி நீர்கொழும்பில் வைத்து சுப்பிரமணியம் துரைராஜா என்பவர் இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டார். இங்கே கொழும்பில் வசிக்கின்ற ஈ.பி. ஆர். எல்.எவ். இச் சேர்ந்த உறுப்பினர்கள், அவர்கள் வதியும் அல்லது இருக்கும் இடங்களுக்கு அண்மையில் உள்ள பொலிஸ் காவல்நிலையங்களிலே தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளார்கள். நீர்கொழும்பிலும்சரி, கொழும்பிலும்சரி, அவர்கள் வதிக்கின்ற இடங்களுக்கு அண்மையிலுள்ள பொலிஸ் காவல் நிலையங்களிலே தாங்கள் எங்கு தங்கியிருக்கின்றோம் என்ற விபரங்களையும் பதிவு செய்திருக்கிறார்கள். ஆனால் பொலிசாரின் அனுமதி இல்லாமல் சிவில் உடையில் வருவோர் இப்படி

> **பயங்கரவாதம் எங்கிருந்தாலும் அது அடக்கப் படவேண்டும் என்பதுமுக்கிய விடயம். ஆனால் பயங்கரவாதத்தை அடக்குவது என்ற பெயரில் ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களும் இளைஞர்களும் துன்புறுத்தப் படுவார்களாயின் அநாவசியமான ஒரு பயங்கரவாதக் கூட்டத்தை உருவாக்குவது என்பதாகிவிடும்.**

டுக் கொள்கிறேன்.

கடந்த 1990 ஆம் ஆண்டு யூலை மாதத்தின் பின்னர் கிழக்கு மாகாணத்தில்தான் ஆயிரக்கணக்கான மக்கள் காணாமல் போயுள்ளார்கள். மட்டக்களப்பில் 3200 பேரும், அம்பாறையில்1340 பேரும், திருகோணமலையில் 1160 பேரும் காணாமல் போயுள்ளார்கள். இவர்கள் எங்கே வைக்கப்பட்டுள்ளார்கள் என்றோ அல்லது உயிரோடு இருக்கிறார்களா, இல்லையா என்பதோ அவர்களின் பெற்றோருக்கோ உற்றார் உறவினர்களுக்கோ இது வரை தெரியாது.

ளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகவே, அவர்களுடைய கஷ்டங்களை சிறிதளவேனும் குறைப்பதற்கு, குறைந்த பட்சம் இங்கிருக்கக்கூடிய தடுப்புமுகாம்களில் எத்தனை ஆயிரம் பேர் உள்ளார்கள், அவர்களுடைய பெயர், முகவரிகள் என்ன என்பவற்றையாவது அறிவிப்பது நல்லவழி வகையாக இருக்குமென நம்புகின்றேன்.

அதுமாத்திரமல்ல பல்வேறுபட்ட தடுப்பு முகாம்களிலும் எவ்வித விசாரணையுமின்றி வெறுமனே இளைஞர்கள் என்ற ஒரே காரணத்துக்காக சந்தேகத்தின் அடிப்படையில்



மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கும், கொழும்பிலிருந்து திருகோணமலைக்கும் இன்னும் பல்வேறுபட்ட பொலிஸ் காவல் நிலையங்கள் என்.டி.எவ்.முகாம்கள் போன்றவற்றுக்கும் அந்தப் பெற்றோரும் உற்றார் உறவினர்களும், அவர்கள் இருக்கிறார்களா இல்லையா என்பதைக் கண்டுபிடிப்பதற்காக நாளாந்தம் நடையாக நடந்து கொண்டிருக்கிறார்கள் ஆகவே, உடனடியாக இலங்கையிலிருக்கக்கூடிய சகல தடுப்பு முகாம்களிலும், பொலிஸ் நிலையங்களிலும், இராணுவமுகாம்களிலும் எத்தனை ஆயிரம் தமிழ் இளைஞர்கள், இல்லையேல் தமிழ்மக்கள் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளார்கள் என்பன போன்ற விடயங்களைப் பொதுமக்களுக்குத் தெரிவிப்பதன்

பல ஆயிரக்கணக்கானவர்களை தடுத்து வைத்திருக்கின்றார்கள். அவர்கள் வருடக்கணக்கில் விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.
அவர்கள் கேட்பதெல்லாம் 'எம்மை விசாரியுங்கள். எம்மீது குற்றமிருப்பின் தண்டியுங்கள் இல்லையேல் விடுதலை செய்யுங்கள். 'என்பது தான். அப்படியான ஆயிரக்கணக்கான இளைஞர்களை எந்தவித விசாரணையும் இல்லாமல் தடுத்து வைத்திருப்பது மனித உரிமை மீறல்கள் மாத்திரமல்ல, நூற்றுக்கணக்கான குடும்பங்களை வாழாவெட்டிகளாக்கி, அக்குடும்பங்களை பஞ்சத்தில் வாழவைக்கும் சூழ்நிலையை ஏற்படுத்துவதுமாகும்.

# ஒரு தொடர்கதையா?

அதன் பின்னர் 1990ம் ஆண்டு டிசம்பர் மாதம் பதினேழாம் திகதி வடக்கு -கிழக்கு மாகாணசபையின் மாகாணசபை உறுப்பினராக இருந்த திரு ஜோர்ஜ் என்பவரின் மனைவியான சகுந்தலா என்பவரும் அவரது சிநேகிதியும் இனந்தெரியாதவர்களினால் கடத்தப்பட்டார்கள். அது தொடர்பாக பல்வேறு சந்தர்ப்பங்களில் நாங்கள் கேட்டும் கூட, இதுவரையும் எந்தவிதமான பதிலுமே எமக்குக் கிடைக்கவில்லை. அதன் பின்னர் 1991ம் ஆண்டு அதாவது கடந்த வருடம் டிசம்பர் மாதம் 18ம் திகதி- மார்க்கண்டு மாதவராசா என்பவர்

> **மனித உரிமை மீறல்கள் யாவற்றையுமே நாம் நிறுத்தி விட்டோம் என்று இந்த அரசாங்கம் தொடர்ச்சியாகக் கூறிக்கொண்டு வருகின்றது. இனிமேலும் இத்தகைய சம்பவங்கள் எதுவும் நடைபெறாது என்ற மீண்டும் மீண்டும் கூறிய போதிலும் கூட மனிதஉரிமைகள் மீறல் என்பது தொடர்ச்சியான ஒரு கதையாக இருந்து வருகிறது.**

யாகத் திடீர் திடீரென எமது கட்சி உறுப்பினர்களை, எமது கட்சி ஆதரவாளர்களை, அபகரித்து செல்வது-கடத்தி செல்வது-தொடர்பாக நாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி அவர்களுக்கும் கௌரவ பிரதம அமைச்சருக்கும் அறிவித்திருந்தும்கூட, இது தொடர் கதையாகவே இருந்து வருகிறது. எனவே இந்த நாட்டிலே ஒரு சுமுகமான நிலை-ஓர் அமைதியான நிலை-கொழும்பிலும்சரி, ஏனைய இடங்களிலும் ஏற்பட வேண்டும் என்றால் முக்கியமாக இத்தகைய இரகசியமான முறையிலே நடக்கும் ஆட்கடத்தலை நிறுத்தவேண்டும்.
வெளிநாட்டுக் கடன்களைப் பெறுவதற்காக 'நாங்கள் மனிதஉரிமை மீறல்கள் எதையும் செய்யவில்லை' என்று கூறிக்கொண்டு, அதே சமயம் பல்வேறுபட்ட மனித உரிமை மீறல்களைத் தொடர்ச்சியாக செய்வது மிகவும் கண்டிக்கத்தக்க ஒரு விடயமாகும். ஆகவே நேற்று முன்தினம் நீர்கொழும்பில் வைத்துக் கடத்தப்பட்ட, எந்தவிதமான காரணமுமின்றிக் கடத்தப்பட்ட, பொலிசாரின் அனுமதியில்லாமலே கடத்தப்பட்ட திரு. துரைராஜா அவர்கள் ஒரு குழந்தைக்கு தந்தையாவார். அவர் எங்கே வைக்கப்பட்டிருக்கிறார் என்பதை கௌரவ பிரதமரும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமானவர் இக் கௌரவ சபைக்கு தெரிவிக்க வேண்டுமென்று கேட்

மூலம் அவர்களின் பெற்றோர், உற்றார், உறவினர்கள் தங்களது பிள்ளைகள், சகோதரர்கள், துணைவர்கள் உயிருடன் இருக்கிறார்களா என்பதை அறியக்கூடியதாக இருக்கும்.

> **ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி எதிர்கட்சியிலே இருக்கக்கூடிய லங்கா சுதந்திரக் கட்சியாக இருந்தாலும்சரி தமிழ்மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான சரியான தீர்மானங்களை முன்வைப்பதற்கு அவர்களுக்கு வக்கில்லை.**

அனாவசியமாக வருடக்கணக்காக அவர்கள் முழுஇலங்கையிலுமே தங்களுடைய பிள்ளைகளைத்தேடி திரியவேண்டியதாக உள்ளது. அதிரடி படையினர் முகாமுக்குப் போனால் இராணுவ முகாமுக்குப் போங்கள் என்றும், அங்கு சென்றால் பல்லே கலவுக்கு போங்கள் என்றும் பல்லேகலவுக்குப் போனால் பூஸாவுக்குப் போங்கள் என்றும் அவர்களுக்கு சொல்லப்படுகின்றது. உண்மையில் அவர்களால் தங்களது பிள்ளைகள், சகோதரர்கள், துணைவர்க

ஆகவே இதற்கு உடனடியாக ஏதோ ஒரு வகையில் தீர்வு காணப்படவேண்டும். அவர்களை விசாரிப்பதாயின் நீதிமன்றத்துக்கு கொண்டு வரவேண்டும்; விசாரணை செய்யவேண்டும் அவர்கள் மீது குற்றம் இல்லையேல் விடுதலை செய்யவேண்டும். இப்படி எதுவுமே இல்லாமல், தாம் ஏன் கைது செய்யப்பட்டோம் என்றோ, தாம் ஏன்உள்ளே இருக்கிறோம் என்றோ ஒரு வித தெளிவும் இல்லாமல் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களை நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்; குற்றவாளிகள் என்றால் தண்டனை கொடுங்கள்; இல்லையேல் விடுதலை செய்யுங்கள்.

இன்று வடக்குக் கிழக்குக்கு அப்பால் பதுளைக்கும் இனப்பிரச்சனை திரும்பியுள்ளதாக இங்கே பல்வேறு உறுப்பினர்கள் மட்டுமன்றிப் பத்திரிகைகளும் சுட்டிக்காட்டின. ஒரு விடயத்தை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். பயங்கரவாதம் எங்கிருந்தாலும் அது அடக்கப்படவேண்டும் என்பது முக்கிய விடயம். ஆனால் பயங்கரவாதத்தை அடக்குவதென்ற பெயரில் ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களும் இளைஞர்களும் துன்புறுத்தப் படுவார்களாயின், அனாவசியமாக ஒரு பாரிய பயங்கரவாதக் கூட்டத்தை உருவாக்குவது என்பதாகிவிடும்.

(எட்டாம் பக்கம் பார்க்க..........)

படிப்பகம்

www.padippakam.com



# அன்பார்ந்த தமிழ் பேசும் மக்களே!

**அன்பார்ந்த தமிழ் பேசும் மக்களே !**
நாம் முன்னர் குறிப்பிட்டது போல தொண்டமானின் சமாதானப் பேச்சுவார்த்தைகள் பிசுபிசுத்துப் போய்விட்டன. இனப்பிரச்சனை தொடர்பாக இராணுவத்தீர்வை தவிர வேறு எந்த வகையிலும் தாம் தீர்வைக் காண விரும்பவில்லை என்பதை ஒருதரம் ஐ.தே. க. தெளிவு படுத்தியுள்ளது.

அதே சமயம் புலிகளின் பாசிசத்திற்கும் அரச படையினரின் பயங்கரவாதத்துக்கும் அஞ்சி அகதிகளாகி, அகதிகளாக்கப்பட்ட பெருந்தொகையான தமிழ், முஸ்லீம் மக்கள் இன்று கொழும்பு உட்பட தென்னிலங்கையின் பல இடங்களில் வாழ்ந்தாலும் இனவாதக் குரல்கள் மீண்டும் சிங்கள அரசியல், மதத் தலைவர்களால் கக்கப்பட்டிருக்கிறது. இவர்களில் பலர் அரசாங்கத்தின் குரல்களாகச் செயற்பட்டிருக்கிறார்கள்.

> **சில தமிழ் அமைப்புக்களை தம்வசப் படுத்தி பிரித்தாளும் தந்திரம், தேவையான சமயங்களில் இனவாதத்தை கக்கி சிங்கள மக்கள் தமக்கெதிராக கிளர்ந்தெழாமல் இருக்கும்படி வைத்திருக்கும் சாமர்த்தியம், சர்வதேச நிறுவனங்களிடம் நிதிபெறுவதற்காக சமாதானத் தீர்வு பற்றிப் பேசும் குள்ளநரித்தனம் இவை எல்லாம் ஐ.தே.கட்சி அரசாங்கத்துக்கு கைவந்த கலைகள். மதர**

தனக்கெதிராகச் செயற்பட்டவர்களின் பதவிகளைப் பறிப்பதிலும்... சட்டநடவடிக்கைகளை எடுப்பதிலும்... தீவிரமாக ஈடுபடத் தெரிந்த ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு தமிழ் பேசும் மக்களுக்கெதிரான இனவாதக் குரல்களை எழுப்புபவர்களை கண்டிக்கவும் இல்லை. அவர்களுக்கெதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவும் இல்லை.

அன்பார்ந்த தமிழ் பேசும் மக்களே ! தமிழ் பேசும் மக்களின் கடந்த கால அரசியல், சமூகவாழ்விலே அவர்களுக்கு இழைக்கப்பட்ட துன்பங்களில் பெரும்பங்கிற்கு சொந்தக்காரர் ஐ.தே.கட்சியினரே.

இனப்பிரச்சனையின் தாக்கத்தை தணிக்கும் வகையில் 1958 இல் உருவான பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தத்திற்கு எதிரான ஐ.தே.கட்சியினரின் பாதயாத்திரை ஜே.ஆர்.டட்லி, பிரேமதாசா போன்றோரால் தலைமை தாங்கி நடத்தப்பட்டது. 'தமிழர்களுக்கு நாடு விற்கப்படுவதற்கு எதிராக சிங்கள மக்களே கிளர்ந்தெழுங்கள்' என்று ஐ.தே.கட்சிப் பத்திரிகையான 'சியரட்ட' இனவாத ஓலம் எழுப்பியது. இதுவே ஐம்பத்தெட்டுக் கலவரத்துக்கு வழிகோலியது. இனங்களுக்கு இடையிலான இடைவெளியை அகலமாக்கியது.

1977 இல் தார்மிஷ்டரின் தார்மீக ஆட்சியின் கீழ் இனவெறி ஊட்டப்பட்டது. ஐ.தே. கட்சிக் குண்டர்களின் கால்களின் கீழ் தமிழ் பேசும் மக்களின் உயிர்கள் ...உடமைகள் நசுங்கின. பதவியிலிருந்த ஐ.தே.கட்சி அரசின் பரிபூரண ஆசியுடன் இன்னுமொரு இனப்படுகொலை அரங்கேறியது. இம்முறை இரத்தத்தின் ருசியை இனவெறி கண்டு கொண்டது. அதற்குக் காரணமானது ஐ.தே.கட்சி.
1981 இல் அதே ஐ. தே. கட்சி அரசு.... அதே குண்டர்கள் கூட்டம்... மீண்டும் இனப்படுகொலை...இம்முறை பலிக்கடவானது மலையகத்து தமிழ்மக்கள்... இதைத்தொண்டமான் மறந்திருக்கலாம் ஆனால் நாம்.....?

மீண்டும் 1981 இல் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்களில் எப்படியாவது சில ஆசனங்களை பெற்றுவிட வேண்டுமென்பதற்காக ஐ.தே. கட்சியாழ்ப்பாணத்திற்கு இறக்குமதி செய்த காக்கி உடை உடுத்த காடையர் கும்பலின் வெறியாட்டத்திற்கு எமது உன்னத யாழ்/நூலகமும், யாழ்நகரமும் காவுகொடுக்கப்பட்டது. இலட்சக்கணக்கான நூல்கள் எரியூட்டப்பட்டன. பத்து வருடங்களின் பின்னர் 1991 இல் பிரேமதாசாவே சொல்கிறார் 'இந்த அக்கிரமத்துக்கு காரணம், சக ஐ.தே.கட்சி அமைச்சர்தான்' என்று.

1983 இரத்த யூலை. அதே ஐ.தே.கட்சிஅரசின் இனவெறியின் உச்சக்கட்டம். தமிழ்பேசும் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட கொலை வெறியாட்டத்தை ஐ.தே.க.அரசு பார்த்து ...இரசித்து...கைகட்டி நின்றது.

1983 இன் பின்னர் கட்டவிழ்த்து விடப்பட்ட அரசபயங்கரவாதம் ஐ. தே. கட்சியின் ஆழுமையின் கீழ்தான் விஸ்தரித்துப் பரவியது. 1987 இல் ஒப்பரேசன் லிபரேசன், அதற்கு முன்னும் பின்னும் பல இடங்களில் நிகழ்த்தப்பட்ட இராணுவ வெறியாட்டங்கள் எல்லாமே ஐ. தே.கட்சி தமிழ் பேசும் மக்களின் வாழ்விலே இரத்தத்தால் எழுதிய கொடுங்கதைகள்.

இடையிலே 1987 யூலையில் இந்திய-ஸ்ரீ லங்கா ஒப்பந்தத்திலே வந்த அமைதியையும் இந்த அரசே கெடுத்தது. அடி வாங்கிக் காடுகளில் பதுங்கிப் போன புலிகளுக்கு ஆயுதங்களை அள்ளிக் கொடுத்தது. மாகாண அரசுக்கான அதிகாரங்களை வழங்க மறுத்த பிரேமதாசாவின் அரசு மாகாண அரசை குலைப்பதற்கான முழுமுயற்சிகளையும் செய்தது. அரச படையினர் புலிகளுடன் இணைந்து தமிழ் தே

> **தம்மை எதிர்ப்பவர்களை அழித்தொழிக்கும் மூன்றாம்தர அரசியல் கலையை இன்று இலங்கைக்கு அறிமுகப்படுத்திய ஐ.தே.க.அரசு, தமிழ்பேசும் மக்களுக்கு மட்டுமல்ல ஸ்ரீலங்காவில் வாழும் அனைத்துமக்களுக்கும் எதிரானது.**

சிய் இராணுவத்தை சேர்ந்த பல நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழ், முஸ்லீம் இளைஞர்களை படுகொலை செய்தனர். பிரேமதாசாவின் இச்செயல்கள் இன்று ஐ. தே. க. இல் இருந்த அமைச்சர்களாலும், உயர் இராணுவ அதிகாரிகளாலும் உறுதிப் படுத்தப்பட்டு விட்டது.

1990 யூன் மாதத்திலிருந்து இன்றுவரை தொடர்ந்து தமிழ்பேசும் மக்களுக்கு இழைக்கப் பட்டுவரும் கொடுமைகள் மிகமோசமானவை குண்டுவீச்சுக்கள், கொலைவெறி ஆட்டங்கள், இராணுவக் குவிப்பு, பொருளாதாரத் தடை, கைதுசெய்தல், காணாமல் போகப் பண்ணுதல் இவை எல்லாம் இனவாத ஐ. தே. கட்சி அரசின் இனஅழிப்பு நடவடிக்கைகளின் சில துளிகள்.

சில தமிழ் அமைப்புக்களை தம்வசப் படுத்தி பிரித்தாளும் தந்திரம், தேவையான சமயங்களில் இனவாதத்தை கக்கி சிங்கள மக்கள் தமக்கெதிராக கிளர்ந்தெழாமல் இருக்கும் படி வைத்திருக்கும் சாமர்த்தியம், சர்வதேச நிறுவனங்களிடம் நிதி பெறுவதற்காக சமாதானத் தீர்வு பற்றிபேசும் கள்ள நரித்தனம் இவை எல்லாம் ஐ.தே.கட்சி அரசாங்கத்துக்கு கை வந்த கலைகள்.

அன்பான தமிழ்பேசும் மக்களே ! தமிழ் பேசும் மக்களுக்கு மட்டுமல்ல இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்கும் எதிரானதே இந்த ஐ.தே.க. அரசாங்கம். அதன் மக்கள் விரோதப் போக்குகளுக்கு எதிராக அம்பலப்படுத்தல்களும், அணிதிரளல்களுமின்றி இந்த அடக்கு முறையாளர்களை தோற்கடிக்க முடியாது.

தம்மை அரசியல்ரீதியாக எதிர்ப்பவர்களை அழித்தொழிக்கும் மூன்றாம்தர அரசியல் கலை இன்று இலங்கைக்கு அறிமுகப்படுத்தியது கூட ஐ.தே.க.அரசுதான்.

தமிழ் பேசும் மக்களின் அன்றாட வாழ்வை கேள்விக் குறியாக்கி, அவர்களை அகதி முகாம்களுக்குள் முடங்கச் செய்து, எங்கள் மண்ணையும், வளங்களையும் நாசம் செய்து, பல்லாயிரக் கணக்கான சிங்கள இளைஞர்களின் படுகொலைக்குக் காரணமாகி .... அனைத்து மக்களதும் அரசியல்;தொழிற்சங்க உரிமைகளைப் பறித்து மிகமோசமான ஒரு ஒடுக்குமுறை ஆட்சியை கட்டவிழ்த்து விட்டிருக்கும் இந்த ஐ.தே.கட்சி அரசாங்கம் தோற்கடிக்கப்பட வேண்டியதே. இதுகுறித்த எமது நடவடிக்கைகள் சரியானவை என்பதை வரலாறு உணர்த்தும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

## முகத்தாரின் முணுமுணுப்பு



இப்ப துவங்கியிருக்கிற நாடகம், சோக்கான நாடகம். தைபிறந்தால் மக்களின்ர பிரச்சனை தீர்ந்துடுமாம். நல்ல டூப்பு. எல்லாரும் ஏறிவிழுந்த குதிரையிலை சக்கடத்தார்ஏறி சறுக்கி விழுந்தாராம் எண்ட மாதிரியாய் தொண்டமான் வெளிக்கிட்டிருக்கிறார். புலியளோட பேசினால் பிரச்சனை தீர்ந்திடுமாம்.

தொண்டமான் ஒரு தனிஆளே..?
அவர் அரசாங்கத்தில ஒரு அமைச்சர். ஆனால் அவரின்ரை கட்சியிலையும் தொண்டமானை பேச்சு வார்த்தை செய்யச்சொல்லி தெரிவு செய்யவில்லை.
பாராளுமன்றத்திலையும் தெரிவு செய்யவில்லை. தனிப்பட்ட முறையில் வெளிக்கிட்டிருக்கிறார் எண்டால், அரசாங்கம்தொண்டமான் என்கின்ற தமிழனை வைச்சே தமிழ்மக்களை பேய்க்காட்டிற மாதிரிப் போகுது.
நீ முன்னாலை பேசுற மாதிரிப் போ, நான் பின்னாலை ஆமித்தாக்குதலை இன்னும் கூட்டுறன எண்டதுதான் பிரேமதாசாவின்ர நோக்கம் என்கிறது அப்பட்டமாய் தெரியுது.
தமிழ்மக்களின்ர நிலையைப் பொறுத்தவரையிலை பேச்சுவார்த்தை மூலம் ஒரு அரசியல் தீர்வு முக்கியம்தான். ஆனால் தொண்டமான் இதயசுத்தியோட பேச்சுவார்த்தைக்கு வெளிக்கிட்டிருந்தாலும் அவர் சேர்ந்திருக்கிற கட்சியோ, பாராளுமன்றமோ அனுமதிக்காமல் இந்த அமைச்சர் தனியாளாக வெளிக்கிட்டால் பம்மாத்திலதானே முடியும்.

இப்ப புலியளுக்கு பேச்சுவார்த்தையை தவிர வேறு வழியே இல்லை. மற்றவழியளெல்லாம் அடைபட்டுப் போச்சுது. அவையின்ர நிலமை படு மோசம், தீவுப்பகுதியையும் ஸ்ரீ லங்காவின்ர ஒரு பகுதியாய் சேர்த்திட்டினமாம்.

எட்டாப்பழம் புளிக்கும் எண்ட மாதிரிப் போச்சு. இன்னும் கொஞ்ச நாளிலை யாழ்ப்பாண ரவுணும் ஸ்ரீ லங்காவின்ரை பகுதியாய் சேர்த்திடுவினம். பிறகென்ன தமிழ் பகுதி அவயளின்ரை விளக்கப்படி கீவுச்சனங்கள் தமிழ் மக்கள் எண்டுற அந்தஸ்தை இழந்து போட்டினம். அமத தர
இப்படிப்பட்ட வீரவேங்கைகள் தொண்டமானை யாழ்ப்பாணத்துக்கு வா.. வா.. எண்டு வில்லங்கப்படுத்துகினம். அவைக்கு தங்கட நிலமை விளங்கிப் போச்சு. தலைவர்மார் தாங்கள் தப்பத்தானே வேணும். இந்தத் தலைவர்களைநம்பிமடியுக்குள்ளை குண்டைக்கட்டி செத்த அப்பாவிப் பிள்ளையளுக்கு எண்டைக்கோ ஒரு நாள் பதில் சொல்லித்தான் ஆக வேணும். எதுக்கும் பொறுத்திருந்து பார்ப்பம் முழுக்க ஸ்ரீ லங்காவோட சேர்ந்திடும். இதை நான் சொன்னா ஆரும் நம்பவா போகினம். எல்லாம் காலம் காட்டும்.

எங்கட புலிப்பொடியளின்ர அரசியல் அறிவைப் பாக்கிறதெண்டால் லண்டன் பி.பி.சி றிப்போட்டருக்கு கொடுத்த பேட்டியை பார்த்தால் போதும். நல்ல கொமேடியாய் இருக்கும்.
ஏன் தமிழீழம் கேட்கிறியள் எண்டு நிருபர் கேட்க, சிங்களப் பகுதியிலை உள்ள பள்ளிக் கூடங்களுக்கு மாபிள் பதிச்ச மலசலகூடமாம் தமிழ்மக்களின்ர பள்ளிக்கூடங்களுக்கு அப்படியில்லையாம் என்று பதில் சொல்லி அரசியலை அப்படியே அள்ளிக் கொட்டோ கொட்டென்று கொட்டியிருக்கிறார் ஒரு பொறுப்பாளர்.
இன்னுமொரு மாவீரர் என்ன சொல்லுறார் எண்டால், எதிரியளை எந்த அளவுக்கு கொல்லுறமோ அந்த அளவுக்கு வெற்றியாம். ஆக மொத்தத்தில எதிரியளைக் கொலை செய்தாத்தான் விடுதலை கிடைக்கும் எண்டிறது புலிகளின்ர விஞ்ஞான விளக்கம்.

இப்பிடிப் பொய்யான விசயங்களை அப்பாவிப் பொடியளுக்கு சொல்லிக் கொடுத்து கொலைவெறி நெருப்பை மூட்டிவிட்டு அதிலை குளிர் காயிறதுதான் புலிகளின்ர போராட்டக் கொள்(ளை)கை. தம
இப்படியான மனிதநேசமில்லாத கொள்கையை வைச்சுக்கொண்டுதான் தமிழ்மக்களின்ரை ஏகபோக பிரதிநிதிகள் எண்டு மார் தட்டுகினம்.

படிப்பகம்

# முறிந்த பனை



**திருமதி ரஜனிதிரணகம,மூன்றுவிரிவுரையாளர்களுடன் சேர்ந்துஎழுதிவெளியிட்ட "THE BROKEN PALMYRAH" (முறிந்தபனை) என்னும் நூலின் தமிழாக்கத்தின் சிலபகுதிகள் 'விடுதலை' பத்திரிகையில் 01.01.1990.முதல் வெளிவந்துள்ளது.அதனை தொடர்ச்சியாக இங்கே மறுபிரசுரம் செய்கிறோம்.**

புலிகள்-ரெலோ சம்பவம் நடந்து சிறிது காலத்தின் பின்னர்,புலிகள் இயக்கத் தலைமையிடம் தமது இயக்கத் தலைமைத்துவம் 'உண்மையில் அவர்களுக்கு என்ன வேண்டும்' என்றும், 'எந்த அடிப்படையில் அவர்களுடன் சேர்ந்து வேலை செய்யலாம்'என்றும் கேட்டிருந்ததாகவும்,அனால் அதற்குப் புலிகளிடமிருந்து எவ்வித மறுமொழியும் கிடைக்கவில்லை என்று முன்னணிப் பிரமுகர் ஒருவரிடம் ஈ.பி.ஆர்.எல்.எவ்.தலைவர் ஒருவர் கூறியிருந்தார்.

இந்தியா பற்றிய பிரச்சனையில், பல தமிழர்கள் இந்தியாவின் பிறர் நலன் கருதும் தன்மை பற்றி உண்மைக்குப் புறம்பான எதிர்புகளைக் கொண்டிருந்தோடு, ஈழத்தைப் பெறுவதில் தாம் இந்தியாவை எவ்வளவு சாமத்தியமாகப் பயன்படுத்துவதாக நினைத்துக் கொண்டிருந்தனர்.அவர்கள் இந்திய அரசியல் தன்மை பற்றி அறிந்திருந்ததால், தமது முடிவுகளுக்காக அவற்றைக் கையாள தம்மால் முடியும் என நினைத்தார்கள். இந்தியாபற்றி தமிழனின் பார்வையை ஆளுமை செய்திருந்த அம்சங்களான பிறர்நலன் கருதும் தன்மையும்,இழிவான தன்மையும் கற்பனைகளையும் உண்மைகளையும் கொண்டிருந்தன.

ரெலோ அழிக்கப் பட்டபின் இயக்கங்களின் பலத்தை சோதித்துக் கொள்வதற்காக 1986 மே இருபதாம்திகதி ஸ்ரீ லங்கா அரசானது ஓர் எல்லைக்குட்பட்டதாக ஒடுங்கிப்போனது

ஆனையிறவிலிருந்து முன்னேறிய படையணியானது பளைவரை சென்று திரும்பியது.

யாழ் கோட்டைக்கள் வந்திறங்கும் கொலிகொப்டர்கள், அருகாமையில் உள்ள இடங்களிலிருந்தவரும் துப்பாக்கிச் சூடுகளுக்இலக்காவதால்,கோட்டையிலிருந்து வெளியேறிய ஒரு படையணி,மண்டைதீவு முகப்பில் தம்மை ஸ்தாபித்துக் கொண்டதன் மூலம் யாழ் கோட்டையில் உள்ள துருப்புக்களுக்குப்

> **சிங்கள மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள்,தமிழ்மக்கள் பற்றிச் சிங்களவர்களை தீவிரமாகச் சிந்திக்க வைக்கும் எனக் கூறப்பட்டது ஆனால் அது நினைத்ததற்கு மாறாக,எதிர்மாறான விதத்திலேயே சிந்திக்க வைத்தது.**

பாதுகாப்பான முறையில் உணவு வழங்கல் கிடைப்பதற்கு வசதியாக ஏற்பாட்டை செய்து கொண்டனர்.

ஸ்ரீ லங்கா இராணுவமானது தொண்டமனாறு, வல்வெட்டித்துறை பகுதிகளில் உள்ள முகாம்களின் சுற்றுப் புறங்களையும் விஸ்தரித்துக் கொள்வதில் வெற்றி கண்டது.

மே மாதம் வரையும்,'எப்போது இந்த இராணுவ முகாம்களில் ஒன்றை போராளிகள் தாக்குவார்கள் ?'என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக இருந்தது.ஆனால் இப்போது,'எப்போது ஸ்ரீ லங்கா இராணுவம் யாழ்ப்பாணத்தை மீளக் கைப்பற்றுவதற்கான தனது முழு முயற்சியை மேற்கொள்ளும்?'என்பது கேள்வியாகி இருந்தது.

புலிகள் இயக்கம்,எதிர்த்து வெல்ல முடியாத ஒரு எதிரியை உருவாக்கிக் கொண்டு விட்டது என்பது தெளிவாக விளங்கியது.

களவுகள் முற்றாக நின்று போயிருந்ததே. பொதுமக்கள் புலிகளின் ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்வதற்கு ஏதுவாய் இருந்தது. ஏழைகளும், மத்திய தரவர்க்கத்தினரும் தனியே விடப்பட்டிருந்தனர்.

புலிகள் இயக்கமானது மொத்த வியாபாரிகளுடனும், வர்த்தகர்களுடனும், அவர்களைத் திருப்திப் படுத்தும் வகையில் பரஸ்பர நன்மை அளிக்கக்கூடிய ஏற்பாடுகளை செய்திருந்தது.

> **புலிகள் இயக்கமானது மொத்த வியாபாரிகளுடனும் வர்த்தகர்களுடனும், அவர்ளைத் திருப்திப் படுத்தும் வகையில் பரஸ்பர நன்மை அளிக்கக்கூடிய ஏற்பாடுகளை செய்திருந்தது. ஏழைகளும், மத்திய வர்க்கத்தினரும் தனியே விடப்பட்டனர்**

அடிக்கடி பணயப் பணத்திகாக கடத்தப்படும் தொந்தரவில்லாமல்,இவர்கள் தங்கள் இலாபங்களை அனுபவிக்கக் கூடியதாய் இருந்தது.

1986 மே மாதத்திற்கு முன் ஒரு மனிதன் மோசடி செய்வதாகக் கேள்விப்பட்டால். முதலில் அதைக் கண்டு பிடிக்கும் போராளிக் குழுவானது, விசாரிப்பதற்காக பெரும்பாலும் இரவில் அவர்மீது திடீரெனத் தாக்கும்,அனேகமாக நிலைமைக்கு தக்கபடி பிடிபட்டவர் மின்கம்பங்களில் கட்டப்பட்டுச் சுடப்படலாம் அல்லது ஒரு குறிப்பிட்ட தொகையை பெற்றுக் கொண்ட பின் விடுவிக்கப் படலாம்.

1986 மே மாதத்தின் பின் சோடா, சிகரெட் போன்ற பல பொருட்களின் விலைகள் உயர்ந்தன. சிறப்பான சமயங்களில் தெற்கே வவுனியாவில் ஒரு லீற்றர் 13-50 ரூபாவிற்கு விற்ற பெற்றோலானது இங்கு 19 ரூபாவிற்கு விற்கப் பட்டது. வியாபாரிகள் பெருமளவு லாபம் சம்பாதித்தனர்.

போக்குவரத்தில் ஏற்பட்டிருந்த தடைகள் யுத்தத்தினால் வேலையிழந்தவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாய் அமைந்திருந்தது. பலர் சைக்கிள்களிலே குறைந்தளவு பெற்றோலை யாழ்ப்பாணத்துக்குள் கொண்டுவந்து தெருவோரங்களில் போத்தல்களில் வைத்து விற்றார்கள்.

வடக்கு மாகாணத்தில் எல்லைப் புறங்களிலிருந்த சிங்களவர்களும் தமிழர்களும் இந்த விசயத்திலாவது தமது செழிப்புக்காக பரஸ்பரம் ஒத்துழைத்தனர்.

யாழ்பாணப் பொருளாதாரம் எவ்வாறுஇயங்கியது என்பதை சாவகச்சேரியைச் சேர்ந்த தலைமை ஆசிரியர் ஒருவரின் எடுத்துக்காட்டாக இங்கு தரப்படுகிறது !ஒப்பரேஷன் லிபரேஷன் தாக்குதல் தொடங்கிய பிறகு அதாவது 26.5.1987 வடமராச்சியைச் சேர்ந்த அகதிகள் தென்மராட்சிக்கு பெருக்கெடுத்த போது,அரசிக்கான கேள்வி மிக உயர்வாக இருந்தது.

> **ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மட்டுமே புலிகளை எதிர்க்கும் மனோநிலையில் இருந்தது. ஈரோசும், தமிழீழ இராணுவமும் புலிகளின் ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்டன.**

ஒரு மூடை அரிசியின் சாதாரணவிலை 230 ரூபா ஆகும். பெருமளவு அரிசியை சொந்தமாக வைத்திருந்த ஒரு மில் சொந்தக்காரர்,50 ஆயிரம் ரூபாயை புலிகளுக்கு வரியாக கட்டியபின் ஒருமூடை அரிசியை 400ரூபா விற்கு விற்பதன் மூலம் கொள்ளை லாபம் சம்பாதித்துக் கொண்டார்.

இது விரைவிலேயே புலிகள் தங்களது தனி ஆதிக்கத்துக்கு முயற்சி செய்வர் என்பது இப்போது எதிர்பார்க்கப் பட்டது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மட்டுமே புலிகளை எதிர்க்கும் மனோநிலையில் இருந்தது.

ஈரோசும்,தமிழீழ இராணுவமும் புலிகளின் ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்டன. ஈரோஸ், ஒரு காலத்தில் பல பிரபலஸ்தர்களின் எண்ணங்களில்,விவேகத்திற்கும்,ஒழுங்கிற்குமான புகழைச் சம்பாதித்திருந்த ஒரு மிகச் சிறிய குழுவாகும். ஆனால் மாக்ஸியத்தில் அதன் ஈடுபாடும், சிங்கள மக்கள் தொடர்பான எண்ணங்களும் மிக சந்தேகத்திற்குரியவையே. அதன் தலைமைத்துவத்தினரும், சில உறுப்பினர்களதும் பேச்சுக்கள் மூலம் அது குறுகிய தேசியவாத உணர்வுகளை வெறுப்பது போன்ற தோற்றத்தைக் காட்டிக்கொண்டது ஆனால் சர்வோதைய ஊழியரான திரு. கதிரமலையின் கொலையானது, ஈரோசினுடைய நியாய உணர்வு பற்றி பலத்த சந்தேகத்தை விட்டுச் சென்றுள்ளது.

1986 இன் மத்திய பகுதி,தெற்கில் நடாத்தப்பட்ட தொடர்ச்சியான குண்டு வைப்புத் தாக்குதல்களைக் கொண்டிருந்தது. தமை

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் புறப்படத் தயாராய் இருந்த 'எயர் லங்கா திரிஸ்ரார்' பயணிகள் விமானத்தை தகர்த்த குண்டு வெடிப்பு, கொழும்புக் கோட்டையின் மத்திய தொலைத் தொடர்பு அலுவலகத்தில் நடந்த குண்டு வெடிப்பு,யானைமார்க் குளிர்பானத் தொழிற்சாலையில் நடந்த குண்டு வெடிப்பு,அனுராதபுரத்திலுள்ள இலங்கைபெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் நடந்தகுண்டு வெடிப்பு என்பன பிரதான சம்பவங்களாகும்.

இச்சம்பவங்களில் பலபொதுமக்கள் இறந்திருந்தனர். அனுராதபுரப் படுகொலைகளைப் போலவே அடக்கி ஆள்வோரின் முறைகளை அடக்கப்படுவோர் கையாண்டிருந்தனர். அத்துடன் இது அடக்கி ஆள்வோரின் நோயாகவும் இருந்தது.

அனுராதபுரம் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தில் நடத்தப் பட்ட குண்டுவெடிப்பானது, வெடிகுண்டு பவுசருடன் உள்ளே சென்ற இருவர் கொல்லப்பட்டதை உள்ளடக்கியதாக இருப்பதால்,இது குறித்து ஒருவரை நோக்கிய பயங்கர வாதத்திலிருந்து விலகியிருந்தது.

அனுராத புரத்திக்கு பெற்றோல் எடுக்கச் சென்ற புலோலி ப.நோ.கூ.சங்கத்தின் பவுசருக்கு உள்ளேயே வெடிகுண்டு வைக்கப்பட்டிருந்தது.யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற பல்வேறு பவுசர்களும் கியூவிலே பெற்றோலுக்காக நின்றன. இந்த வெடிகுண்டு பவுசருடன் சென்றிருந்த இருவரும் கொல்லப்பட்டவர்களில் அடங்குவர் எனத் தெரிய வந்தது.

இக்குண்டு வெடிப்பில் சம்பந்தப் பட்டிருந்த பகுதியினர் புலிகளுடன் அல்லது ஈரோசுடன் அல்லது இருதரப்புடனுமோ சம்பந்தமானவர்கள்தான் என்பது சர்வதேச செய்தி மூலங்களில் பரவலாக அடிபட்டது.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் 1984 இல் எயர் லங்கா விமானத்தில் நடந்த குண்டு வெடிப்பில், தமிழீழ இராணுவத்தின் பெயரும் அடிபட்டது.இந்தத் தாக்குதலுக்கு எந்த இயக்கமும் உரிமைகோரவில்லை அதனால் வெளிநாடுகளில் வசிக்கும் தமிழ் வட்டாரத் தகவலின்படி இத்தாக்குதலுக்கு, ஒரு போராளிக் குழுவின் மேல்மட்ட உறுப்பினரால் உரிமை கோரப்பட்டது.

ஸ்ரீ லங்கா இராணுவத்தினதும்,தமிழ் போராளிக் குழுக்களினதும் பயங்கர வாதத்துக்கு வெளிநாட்டவர்களால் வித்தியாசம் ஏதும் தாணமுடியாதிருந்தது. இந்நிகழ்வுகளினால், நேர்ந்த இன்னொரு முக்கிய விளைவாக, யாழ்ப்பாணத்தில் பெற்றோலியப் பொருட்களும்;குளிர்பானங்களும்;எரிவாயுவும் விலையானவையாகவும் அரிதானவையாகவும் மாற வழிவகுத்தன.

வவுனியாவில் சிங்களப் பிரயாணிகளுடன் சென்ற பஸ் ஒன்றிலும் குண்டு வெடிப்பு நடந்தது. தமிழ் பொதுசனப் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு என்றும் தளராத உறுதி படைத்த உபசரணைகளை செய்து வந்த சிங்கள முதியவர் ஒருவரும் அவரது மகனும் பலியாகிப் போனவர்களில் அடங்குவர்.

> **ஈரோசினது மார்க்சிசத்தின் மீதான ஈடுபாடும், சிங்கள மக்கள் தொடர்பான எண்ணங்களும் மிகச் சந்தேகத்துக்கு உரியவை. அதன் தலைமத்துவத்தினரது பேச்சுக்கள் மூலம் குறுந்தேசியவாத உணர்வுகளை வெறுப்பது போன்ற தோற்றத்தை ஈரோஸ் காட்டிக் கொண்டது.**

சிங்கள மக்களுக்கெதிரான மேற் கூறப்பட்ட நடவடிக்கைகள், தமிழ்மக்கள் பிரச்சனை பற்றிச் சிங்களவர்களை தீவிரமாகச் சிந்திக்க வைக்கும் எனக் கூறப்பட்டது.ஆனால்அது நினைத்தற்கு மாறாக,எதிர்மாறான விதத்திலேயே சிந்திக்க வைத்தது.

பயங்கரவாதமானது வசதிகளை அண்மித்ததாய் இருந்த போது அமைதியான நெருக்கடிகள் அதிகரிப்பதை,உதாரணமாக பத்திரிகைகள் வாயிலாகத் தெரிந்து கொள்ள முடிந்தது.

அதே சமயம் ஒப்பரேசன் லிபரேசனின் போது காணப்பட்டது போன்ற தற்காலிகமான இராணுவ வெற்றிகளும் இறுதிஇராணுவ தீர்வைநோக்கி நெருக்கடிகளை கொடுத்தன

ஜனநாயகத்தின் மீளுயிர்ப்புக்கோ, மாறுதலுக்கான எண்ணங்களோ இல்லாத வேளையில், இவையனைத்தும் பல்வேறு விதமான செய்தி மூலங்களை கையாளும் ஓர் அழிவு விளையாட்டாக்கியது. அமத (தொடரும்)

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



பல்கலைக்கழக ஆசிரியர்கள் மனித உரிமைகள் (யாழ்ப்பாணம்) அறிக்கை

# அரசியல் அழிவுகளும் மனித சோகங்களும்

1987 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இலங்கையின் தலைவர் இந்தியாமீது யுத்தப் பிரகடனம் செய்தபோது அதன் விளைவுகள் பற்றி சிந்திக்க வில்லையா என அவரிடம் கேள்வி கேட்கப்பட்டது. அதற்குப் பதிலளிக்கையில் விளைவுகள் பற்றித்தான் சிந்திக்கவில்லை என கூறினார். ஆனால் இந்தியாவோடு யுத்தத்தில் இறங்குவதா இல்லையா என தான் யோசித்தாக அவர் தமது பதிலில் குறிப்பிட்டிருந்தார். இது யாழ்ப்பாண படித்தவர் மத்தியில் வரவேற்பைப் பெற்றது. பொருத்தமான சாதுரியமான ஒன்று என அவர்கள் இதைக் கருதியது போல இவ் வரவேற்புக் காணப்பட்டது.

யாழ்ப்பாண பஸாருக்கு செல்வோமானால் கூலிகள் மூட்டைகளைச் சுமந்தபடி அங்குமிங்குமாக திரிவதை பார்க்கலாம். இவர்கள் மாலையானதும் தமது அன்றைய கூலியை பெற்றுக்கொண்டு தவறணைக்குச் சென்று மூச்சு முட்டுமளவிற்கு குடிப்பார்கள். பின்னர் அடிதடியிலும் இறங்குவார்கள். இவ்வாறு அடிதடியில் இறங்குவதற்கு முன்பாக தமது செய்கைகள் தமது குடும்பத்தை எவ்வாறெல்லாம் பாதிக்கப் போகின்றன என்பதை பற்றியோ தமது குடும்பங்கள் பட்டினியால் வாடநேரிடுமா அல்லது தெருவில் நிற்கவேண்டியிருக்குமா என்பதையோ கொஞ்சமும் சிந்திப்பதில்லை சண்டையில் இறங்குவதா இல்லையா என்பது பற்றி மாத்திரமே அவர்கள் யோசிப்பார்கள். நாம் இச்செய்கைகளை பொறுப்பற்றதனம் என்று கணிப்போம்.

அவர்களுக்கு புத்தி சொல்லி திருத்த முயல்வோம். ஆனால் ஒரு தலைவர் இவ்வாறு நடந்து கொள்ளும்போது விபரம் தெரிந்தவர்கள் அதை வரவேற்பார்களானால் அது குறித்து நாம் அச்சமடையவேண்டி இருக்கிறது. இப்படி ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

முழு உலகிற்கும் முன்பாக ஒரு தலைமை மக்களைத் தாழ்த்தும் போது படித்த ஒரு சமூகம், எவ்வாறு அதை வரவேற்க முடியும். கற்பனை இலட்சியங்களுடனான தமிழ் அதிகாரவாதம் அடிப்படை மனித நலன்களை கீழே போட்டு மிதிப்பதை நடுத்தர வர்க்கத்தின் பெரும்பான்மையானோர் அங்கீகரிப்பதில் இக் கேள்விக்கான பதிலில் ஒருபகுதி அடங்கியிருக்கிறது. கடந்த பத்தாண்டுகளுக்கும் அதற்கு மேலுமாக விடுதலைப் புலியினர் மேற்கொண்டு வரும் நடவடிக்கை எதையெல்லாம் எதிர்பார்க்க வேண்டிவரும் என்பதில் சந்தேகத்தை எழுப்பவில்லை. தனிப்பட்ட நபர்கள் கொலை செய்யப் பட்டதை இதற்கு சாட்சியாக முன்வைக்க முடியும்.

தமிழ் மக்களில் பலர் சிங்களக் கலாச்சாரத்தை காட்டுமிராண்டித் தனமானது எனக் கருதிவருகின்ற போதிலும் இப்போது தமிழ் கலாச்சாரத்தைவிட சிங்களக் கலாச்சாரத்தைவிடச் சிங்களக் கலாச்சாரம் நம்பிக்கையூட்டும் நிலையில் இருந்து வருகிறது.

புலிகள் எவ்வாறான இலக்குகளை நோக்கிச் செயல்பட்டனர் என்பது குறிப்பிடத் தக்கவை 1982ம் ஆண்டு கொல்லப்பட்ட சுந்தரம், 1984ல் கொல்லப்பட்ட மனோ மாஸ்ரர் ஆகியோர் தீவிரவாத போராட்டத்தின் மூலம் முதிர்ச்சி பெற்றவர்கள். இவர்கள் மாத்திரம் உயிரோடு இருந்தார்களானால் குறைந்த அதிகார மனப்பான்மையும் மக்களுக்கு பதில் சொல்லும் பொறுப்பு வாய்ந்த தன்மையும் கொண்ட தரமான, அதே சமயம் வித்தியாசமான ஒரு தலைமைத் துவம் கிடைத்திருக்கும் சுந்தரம் புளொட் இயக்க உறுப்பினர், மனோ மாஸ்ரர் ரெலோவைச் சார்ந்தவர். அவர் கொல்லப் பட்ட சமயம் தலைமைத்துவத்துடன் பிணக்கு பட்டுக்கொண்டு தனது சொந்த ஊரான பருத்தித்துறைக்கு திரும்பி வந்திருந்தார். அச்சமயம் ஏனைய தீவிரவாத குழுக்களும் வலிமை பெற்றவையாக காணப் பட்டன. இதனால் விடுதலைப் புலிகள் கொலைகளைப் புரிய தருணம் பார்த்துக் கொண்டிருந்தனர். இதற்கான வாய்ப்பும் வந்தது. மனோமாஸ்ரர் இயக்கங்களின் ஆதரவின்றி இருந்தசமயம் புலிகள் அவரை தீர்த்துக்கட்டினர். தமிழ்மக்களின் போராட்டத்திற்கு புதிய ஆரோக்கியமான வழிகாட்டலை வழங்கக்கூடிய ஒருஉறுதியான நபர் இவ்வாறு கொலை செய்யப்பட்டார். புலிகள், விஜயநாதன் மற்றும் அண்ணாமலை போன்ற பழம் பெரும் இடதுசாரிகளை தீர்த்துக் கட்டினர்.

மாணவர்கள் பயங்கரவாதம் காரணமாக செயலிழந்த சமயம் பார்த்து மாணவர் தலைவர் விமலேஸ்வரனை அவர்கள் கொலை செய்தனர். இதற்கெனப் புலிகள் இரண்டாண்டுகள் காத்திருந்தனர். இயக்கத்தை விட்டு வெளியேறிச் சென்றவர்கள் தேடிப் பிடிக்கப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர். ஆனால் இயக்கத்தை விட்டு வெளியேறியவர்கள் சாதாரண நிம்மதியான வாழ்க்கை மேற்கொள்ளும் பொருட்டு மட்டுமே அவ்வாறு செய்திருந்தனர். இவ்வாறு சுற்றி வளைக்கப்பட்ட நூற்றுக்கணக்கானோருக்கு நடந்ததை இன்னும் வெளியே தெரியவரவில்லை. இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் தமிழ்மக்கள் இடையே காணப்பட்ட அசல்தன்மை, துணிவு, ஆளுமை, சிந்தனைத்திறன் ஆகியவற்றை புலிகளால் அழிக்க முடிந்தது. புதிய காற்று புகமுடியாத வகையில் தமிழ்சமூகம் ஒருநிலையில் தள்ளப்பட்டதோடு வெளிஉலகுடனான ஆக்கபூர்வமான தொடர்புகளும் துண்டிக்கப் பட்டன.

விடுதலைப்புலிகள் தமிழர்களுக்கு எதிராக பயங்கரவாதத்தை நடைமுறைப் படுத்தியதோடு தமது எதிரிகளாகக் கருதியவர்களையும் ஒடுக்கினர். பயங்கர வாதமே அவர்களுடைய ஒரே மருந்தாக இருந்தது.

கலை மற்றும் இலக்கிய உலகை எடுத்துக் கொண்டால் அங்கும் இவற்றின் பிரதிபலிப்புகள் காணக்கூடியதாக உள்ளன. 1985 ஆம் ஆண்டிலேயே அரசாங்க நிர்வாக நடைமுறைகள் யாழ்ப்பாணத்தில் காணப்படவில்லை. அப்படியிருந்தும் அறிவுபூர்வமான செயற்பாடுகள் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருந்தன. இளைஞர்கள் பல்வேறு விடயங்களை எடுத்துக்கொண்டு அவற்றை அலசி ஆராய்ந்தனர். இலக்கிய முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. கையேடுகள், துண்டு பிரசுரங்கள் ஏராளமாகக் காணப்பட்டன. நாடகக்குழுவினர் பல்வேறு நாடகங்களை மேடையேற்றி வந்தனர். ஆனால் 1986 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் ரெலோ இயக்கத்தை புலிகள் அழித்தொழித்ததை அடுத்து மேற்படி எல்லா இலக்கிய மற்றும்கலை சம்பந்தமான நடவடிக்கைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கப் பட்டது.

இன்றைய யாழ்ப்பாணத்தில் அறிவு ஜீவிகள், நாடகக் கலைஞர்கள், மதத்தலைவர்கள் என யாருமே இல்லை. கட்டளைக்கு கீழ்படிபவர்கள் மட்டுமே இருக்கிறார்கள். சாதாரண சிவில் வாழ்வை எடுத்துக்கொண்டால் அங்கு ஆத்மா இல்லை. சிவில்வாழ்வின் ஜீவன் போய்விட்டது

இன்றைய யாழ்ப்பாணத்தில் அறிவு ஜீவிகள், நாடகக் கலைஞர்கள், மதத்தலைவர்கள் என யாருமே இல்லை. கட்டளைக்கு கீழ் படிபவர்கள் மட்டுமே இருக்கிறார்கள். சாதாரண சிவில் வாழ்வை எடுத்துக் கொண்டால் அங்கு ஆத்மா இல்லை. சிவில் வாழ்வின் ஜீவன் போய்விட்டது.

இந்நிலவரத்தோடு பாதிக்கப்பட்ட நிலையிலிருக்கும் தென்னிலங்கையை ஒப்பிட்டுப் பார்த்தால் தென்னிலங்கையில் இன்னும் சஞ்சிகைகள் மற்றும் இலக்கிய முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதை அவதானிக்கலாம் தெற்கில் பல அரசியல் அமைப்புக்கள் சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராகக் குரல் எழுப்பி வருகின்றன. தெற்கில் மட்டுமன்றி வடக்கிலும் மனித உரிமைகள் பிரச்சனையை அலை கிளப்பி வருகின்றன. இங்கு நாடகங்கள் தயாரிக்கப்படுகின்றன. சிலசமயம் அவை தடை செய்யப் படுவதுண்டு. பின்னர் அவைமீண்டும் மீண்டும் மேடையேற்றப்படுவதும் உண்டு. கிராமப்புறங்களில் யுத்தத்திற்கு எதிரான நாடகங்கள் தயாரிக்கப்படுகின்றன. இளைஞர்கள் யுத்தகளத்துக்கு அனுப்பப்படுவதுபற்றி அவைகேள்வி எழுப்புவதாக அமைந்திருக்கின்றன. வடக்கு, கிழக்கை விடத்தெற்கில் கல்வி நல்ல நிலையில் உள்ளது. தமிழ் மக்களின் கல்வியில் காணப்படும் பிரச்சனைகளில் அதிகமானவை தாமே உருவாக்கப்பட்டவை.

பாகுபாடுஎன்பது எப்போதும் இருந்துவரும் ஒன்றுதான். ஆனால் கல்வி, போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் தொலைத்தொடர்பு ஆகிய சாதரண சிவில் வாழ்க்கைக்கான கட்டமைப்புக்கள் சமீப காலத்தில் அழிக்கப்பட்டன அல்லது மட்டுப்படுத்தப்பட்டன. எவ்வாறான அரசியல் இங்கு நடத்தப்பட்டு வருகிறது என்பதற்கு இதுஒரு நல்ல உதாரணம். இதேசமயம் புலிகளின் அரசியலை எடுத்துக் கொண்டால் தமக்கெதிராக ஏதாவது ஒன்று நடக்குமானால் அவ்வியக்கம் தமிழ் மக்களுக்களித்த உறுதிக்குமாறாக இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டு விடுகிறார்கள்.

1987ஆம் ஆண்டு செப்டம்பர் அக்டோபர் மாதங்களில் இயக்கத்தை விட்டுவெளியேறியவர்கள் மற்றும் சிங்கள குடிமக்கள் பேரில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் மற்றும் இன்றைய போருக்குக் காரணமாக அமைந்த கொலைகள் ஆகியவற்றை இதற்கு உதாரணமாகக் காட்ட முடியும்.

விடுதலைப்புலிகள் தமிழர்களுக்கு எதிராக பயங்கரவாதத்தை நடைமுறைப் படுத்தியதோடு தமது எதிரிகளையும் ஒடுக்கினர். பயங்கரவாதமே அவர்களுடைய ஒரே மருந்தாக இருந்தது. இவ்வாறு செய்வது சாதாரண மனித அபிலாஷைகளில் தமிழ் மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தி சிங்களக் கலாச்சாரத்தை அழிக்கும் வகையில் அவர்களை தூண்டி விடுவதாக இருந்தது.
தமிழ் மக்களில் பலர் சிங்களக் கலாச்சாரத்தை காட்டுமிராண்டித் தனமானது என்று கருதிவருகின்ற போதிலும் இப்போது தமிழ் கலாச்சாரத்தை விட சிங்களக் கலாச்சாரம் நம்பிக்கையூட்டும் நிலையில் இருந்து வருகிறது என்பது இங்கு கவனிக்கத் தக்கது.

இந்தியப் பத்திரிகையாளரான ஜி. ரமேஷ் (லங்கா கார்டியன் நவம்பர் - 15, 1990) இதுவரை தமிழ் மக்கள் எதிர்கொண்டிராத அதிர்ச்சிக்குரிய கேள்வியை எழுப்பியிருக்கிறார். அடுத்த நூறு ஆண்டுகளுக்கு தமிழ் மொழி உயிர்வாழுமா ? என்பதுதான் அக் கேள்வி. எமது போராட்டத்தின் உண்மையான இலட்சியத்தை வைத்துப் பார்க்கும் போது இக்கேள்வி அர்த்தமுள்ளதாகவே தென்படுகிறது. (தொடரும்)

★ ★ ★ ★ ★

## உதவிவழங்குவோருக்கு கண்துடைப்பு

இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகள் இலங்கைக்கு உதவிவழங்குவதற்கு சில நிபந்தனைகளை விதித்துள்ளது. அதில் கடந்தகாலங்களில் மனிதஉரிமை மீறல்களை செய்தவர்களை கூண்டில் நிறுத்திவைத்து தண்டிப்பதுடன் பதவிகளில் இருந்து நீக்க வேண்டும் என்றும் நிர்ப்பந்தித்துள்ளது. இந்த நிபந்தனைக்கு கண்துடைப்பு செய்ய வேண்டி, பிரேமதாசாவிற்கு மிகவும் நெருக்கமானவரும் ஜே. வி. பி. காலங்களில் பல கொலைகள் செய்தவருமான டி. ஐ. ஜி. உருகம்பொல மூன்றுமாத கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளார். அதேபோன்று சர்வதேசரீதியில் அம்பலமாகி இலங்கை அரசை தலைகுனிய வைத்துள்ள றிச்சார்ட் டி சொய்சாவின் கொலையில் சம்பந்தப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் வீட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது

## வர்த்தகர்களை புலிகள் கடத்தல்

கொழும்புக்கும் மன்னாருக்கும் இடையில் வர்த்தகம் செய்து வந்த மூப்பது முஸ்லீம் வர்த்தகர்கள் தலைக்கு தலா மூப்பது இலட்சம் ரூபா கப்பம் கோரிக் கடத்தப் பட்டுள்ளனர். கொடுக்கத்தவறினால் கொல்லப்படுவார்கள் என உறவினர்கள், குடும்பத்தினருக்கு எச்சரிக்கப்பட்டுள்ளனர். இதேவேளையில் சுன்னாகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சுமார் மூப்பது முஸ்லீம்கள் புலிகளால் குடாநாட்டை விட்டு துரத்தப்பட்டுள்ளனர்.

படிப்பகம்

www.padippakam.com



# அறுவை அம்பலத்தார்

என்ன அம்பலத்தார் வலு ஆச்சரியமாக இருக்குது.

ஏன் அப்படிச் சொல்லுறியள் வடிவேலு ?

ஒண்டுமில்லை அம்பலத்தார்... உங்களைக் காணற நேரமெல்லாம் இழுத்துவைச்சு அறுத்துக் கொண்டிருப்பியள். இண்டைக்கி வலு சைலண்டாக இருக்கிறியள். ஸ்ரொக் ஒண்டும் இல்லையோ.

இல்லை வடிவேலு இந்த இயக்கத்திலிருந்து விட்டு இப்ப இங்கினேக்க வந்திருக்கிற வையளைப் பற்றி நினைச்சுக் கொண்டிருந்தனான். அவையள்வந்து இங்கைஏன் வாயை மூடிக்கொண்டிருக்கினம் எண்டு விளங்கேல்லை.

ஏன் அவையளுக்கு என்ன நடந்தது ?

அவையளுக்கு ஒண்டும் நடக்கேல்லை அவையள் கார் எண்டும், கடைகள் எண்டும் நல்லாத்தான் இருக்கினம்.

அப்ப பிறகென்ன அம்பலத்தார் ?

அவையள் குளோசாப் பழகிறவயளிட்டைத்தான் ரகசியமாக தங்கடை பொட்டுக் கேடுகளை அவிழ்த்து விடுகினமாம். அவையள் இதைவிட்டிட்டு கொஞ்சம் ஓப்பினாக சொன்னால் அரைவிசர் பிடிச்சு இங்கினேக்கை அலையும் பொடியளை கொஞ்சம் தெளிவாக்கலாமெல்லோ.

நீங்கள் எந்த இயக்கத்தைப்பற்றிக் கதைக்கிறியள் அம்பலத்தார்.

மற்ற எல்லாரையும் கொன்டு குவிச்சும் அரை உயிரோடை எரிச்சும் போட்டுத் தாங்கள் தான் ஒரு ஆக்கள் நிண்டு சண்டை பிடிக்கிறமெண்டு கதை விடுகிற கூட்டத்தைத் தான் சொல்லுறன்.

..................... ...... ......

என்ன வடிவேலு நீ சையிலண்டாக விட்டாய் ?

ம்..ம்.. ஒண்டுமில்லை நீங்க சொல்லுங்கோ அம்பலத்தார்.

தாங்கள் எப்படி சனத்துக்கு முன்னாலை நல்ல பிள்ளைகள் மாதிரி நடிக்கிறதெண்டும், தங்கடை காம்புக்குள்ளை போடுற கூத்தும் கும்மாளமும் சிலநேரம் சுனாப்பானாவும் சேந்து கும்மாளம் அடிக்கிறதெண்டும்....

ஆரது சுனாபானா எனக்கு விளங்கேல்லை.

அதுதான் அவையள் பெண்பிரிவெண்டு சொல்லுற சுதந்திரப் பறவைகள்.

சொறிஅம்பலத்தார் இடையிலை குழப்பிப்போட்டன் நீங்கள் சொல்லுங்கோ.

எத்தனை பேரை உட்பூசலாலை மண்டையிலை போட்டுவிட்டு களத்திலை வீரமரணமெண்டு அஞ்சலியும், ஊர்வலங்களும் வைச்ச விடயங்கள் மற்ற இயக்கங்களின்ரை பேரைச்சொல்லி கொள்ளையடிச்ச கதையள் எத்தனை தலைவர்மார் தம்மும் தண்ணியும் அடிக்கிற பொட்டுக் கேடுகள் இப்படிப் பல திருகுதாளங்கள். இதுகளை எல்லாம் வந்திருக்கிறவை குளோசாப் பழகிறவையோடை சொல்லாமல் ஓப்பினாகச் சொன்னால் மாயையிலை மூழ்கி மந்தைகளாகத் திரிகிற சிலரை மனிசர்களாக மாற்ற உதவுமல்லே.

அம்பலத்தார் நீங்கள் சொல்லுறபடி அவையள் ஒருபுத்தகத்தையோ, நோட்டீசையோ அடிச்சுவிடலாம்தான். நீங்களே அவையளிட்டை இதைப்பற்றி கேளுங்கோவன்.

அறுப்பான்கள் ஆரோ என்னைப்பற்றி வத்திவைச்சுட்டாங்கள். அதாலை அவையள் என்னோடை அளவாத்தான் வாயைத் திறக்கினம். எண்டாலும் நான் விடுவனே. அவையளோடை பழகிற ஒருத்தர் எனக்கும் குளோஸ். அவர்மூலமாய் கேட்பிச்சனான். அவையள் சொல்லுகினமாம் தங்கடை அப்பா, அம்மா, அக்கா, தம்பி எல்லாம் ஊரிலை எண்டும் அவையளுக்கு ஏதும் நடந்திடுமெண்டும் பயப்பிடுகினமாம்.

அதிலையும் ஒரு நியாயம் இருக்கத்தானே செய்யுது அம்பலத்தார்.

வடிவேலு ஆரெண்டாலும் அப்பாவியளை பலிகொடுக்க வேணுமெண்டு நான் சொல்லேல்லை. ஆனால் இவங்களெல்லாம் சொந்த பந்தங்கள் எல்லாத்தையும் துறந்து தானே களத்துக்கு போன நாங்கள் எண்டு சொன்னவையள். அப்போ இல்லாத சொந்தம் இப்ப என்னெண்டு வந்தது. சும்மா ஏகேயை ஒரு திறிலாக தூக்கிக் கொண்டு திரிஞ்சு நாட்டாண்மை காட்டிப் போட்டு இப்ப இங்கவந்து றீல் விடுகினம். அங்கை நாட்டிலை இன்னும் எவ்வளவு பொடியள் இவையளின்ரை இயக்கத்துக்கு எதிராக துணிஞ்சு கதைக்கிறாங்கள். அவங்களுக்கு எல்லாம் அப்பா, அம்மா எண்டு பாசமில்லையோ? எத்தனையோ பேர் அப்பா, அம்மாக்களையும், சகோதரங்களையும் இந்த மிருகங்களிட்டை பலி கொடுத்திட்டாங்கள்.

அதுமட்டுமே எங்கடை சனத்தை அழிச்சுக் கொண்டிருக்கிற அரசாங்கத்துக்கு எதிராகவுமெல்லே கொழும்பிலை இருந்துகொண்டு தொடர்ந்து போராடுகிறாங்கள் அதுக்கு எவ்வளவு துணிச்சல் வேணுமெண்டு ஒருக்கா யோசிச்சுப் பார். அந்தத் துணிச்சல் காரர்களை தங்களோடுசேர் அல்லது வாயைமூடு எண்டு மிரட்டி அரசாங்கம் ஆட்களைக் கடத்திக் கொண்டுபோய் கொலை செய்யுதாம். எதுக்கும் அஞ்சாத அவங்கள் தொடர்ந்து போராடுறாங்கள். அவங்களெல்லோ உண்மையான போராளிகள். அவங்களுக்கும் இவையளைமாதிரி வெளியிலை வந்து ஒதுங்கியிருக்கத் தெரியாதோ? நீயே சொல்லு வடிவேலு. இவையளெல்லாம் ஒரு தொடை நடுங்கியள். சும்மா .வாய்ச்சவடால்தான்.

சரி அம்பலத்தார் வேலைக்கு நேரம் போட்டுது. மெடம் ஏசப்போறா. பிறகு சந்திக்கிறன் எண்டு சொல்லி நடக்கத் தொடங்கிய வடிவேலு...

சீ.... அம்பலத்தார் மாதிரி எனக்கும் துணிச்சல் வராதாம். வந்தால் இந்தத் தண்டல் சோத்துக் காரங்களுக்கு மாதாமாதம் கொட்டுற அநியாயக்காசைநிப்பாட்டிப் போடுவன். இங்கை இருக்கிற எனக்கே துணிச்சல் வரயில்லை எண்டால் ஊரிலை இருக்கிற சனங்கள் எம்மாத்திரம்.

# புலிகளின் பொருளாதாரத்திட்டம்

## ஆகா பிரமாதம்!

ஈழப்போராட்ட வரலாற்றில் கற்கால மனிதர்களைப்போல் புலிகள் ஈழப் போராட்டத்தை கொண்டு செல்வதை, ஓரளவுஅரசியல் படைத்த தற்கால எவரும் உணரமுடியும். கொலை, கொள்ளை, மக்கள் அழிவுகள் மற்றும் எல்லாவித பயங்கரவாத நடவடிக்கைகளும் தான் ஈழப்போராட்டம் எனக் கருதிய புலிகள் ஆரம்பத்திலிருந்தே 'அழிப்பு' அரசியலில் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு போராட்டம் தொடங்கினால் வரப் போகும் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று உணரமுடியாதவர்கள், அதாவது பொருளாதார நிலையை எடுத்தால் அதிகமான முக்கிய தேவைகளுக்கு ஸ்ரீ லங்காவையே நம்பி இருக்க வேண்டும். ஆனால் போராட்ட காலத்தில் அவை தடை செய்யப் பட்டால் அடுத்த கட்டம் என்ன? என்பதை உணராது அதற்கான ஆயுத்தம் எதையும் செய்ய முயலாது கொலை, கொள்ளை, கள்ளக்கடத்தல் காரர்களுடன் ஈழப்போராட்டத்தை நடத்தலாம் என்றே இந்த 'மாவீரர்கள்' தமது பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கிறார்கள். (கல்கியும், குமுதமும் வாசித்த தலைவரின் கீழ் போராட்டம் என்று சொல்லி ஒன்றை நடாத்தும் குழுவிடம் அதிகம் எதிர்பார்க்க முடியாதுதான்.)

இப்புலிகளின் கடந்த பதினைந்து வருட போராட்ட அனுபவத்தின் பின் ஈழப்பொருளாதாரத்தின் முக்கியம் பற்றி 'காலம்' கடந்து ஞானம் பிறந்தது போல் புலி முக்கியஸ்தர்கள் கூறுவதைப் பாருங்கள். 'தன்னிறைவுப் பொருளாதாரம் எமது இலட்சிய வாழ்விற்கு மூலாதாரமானது. தனியரசு நிர்மாணத்திற்கு அத்திவாரமானது. உணவுப் பொருட்களுக்கும் மற்றும் அத்தியாவசியத் தேவைகளுக்கும் சிங்கள தேசத்தில் தங்கியிருந்தபடி தனியரசு கோரிப் போராடுவதில் அர்த்தமில்லை'

- பிரபாகரன்

'அரசின் திட்டத்தை முறியடிக்கவே உபஉணவுப் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளுமாறு உங்களை நாம் கேட்டுவருகிறோம். அரசு விதிக்கும் பொருளாதாரத்தடையை வெற்றி கொள்ள அது ஒன்றே எமக்குள்ள வழியாகும்.

- யோகி

'தனியரசு ஒன்றுக்கு வலுவான பொருளாதார அடித்தளம் அவசியம். இன்று சிங்களத் தேசம் எம்மீது விதித்த பொருளாதாரத்தடை என்பது நாங்கள் எமது தேசத்து பொருளாதார வாழ்வை கட்டியெழுப்ப எங்களுக்கு வழங்கப் பட்ட சந்தர்ப்பமாகும்.' - மாத்தையா

இவர்கள் நான் மேலே கூறியது போல் பயங்கரவாதம்தான் போராட்டம், களவு; கடத்தல்கள்; தமிழ்மக்களைச் சுரண்டுவது போன்றவை தான் பொருளாதாரம் என எண்ணியிருக்க வேண்டும். அந்த நினைப்பில்தான், ஈழப்போராட்டத்துக்கு முக்கியமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைகளையும், அதன் மூலம் மக்களைத் தயார்படுத்தும் நிலையிலும் இருந்த அமைப்புக்களை இவர்கள் ஈழத்தில் வேலை செய்யவிடாது பலவிதத்திலும் தடை செய்தனர். அழித்தனர். அதன் முடிவு 'வைக்கோல் பட்டடை நாய்' என்பார்களே அந்த நிலமைக்கு புலிகளைக் கொண்டு வந்து விட்டுள்ளது.

ஆரம்பகாலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ் ஆகியவற்றின் பொருளாதார நடவடிக்கைகள், புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளால் அவ்வப்போது ஸ்ரீ லங்கா இராணுவத்தின் தாக்குதல்களுக்குள்ளானது.

இதனால் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஓர் முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய நிலமை மற்றய அமைப்புகளுக்கு ஏற்பட்டது. அதோடு மக்களைப் போராட்டத்துக்கு தயார் படுத்துவதும் நிறுத்தப்பட்டது. (புலிகளின் பாஷையில் சொன்னால் போராட்டத்துக்கு மக்களைத் தயார் படுத்துவது என்பது, மக்கள் செறிந்து வாழும் இடங்களில் நிலக்கண்ணிகளை வைத்து அதனால் ஒன்றிரண்டு இராணுவத்தை சாகடித்து அதனால் நடக்கும் இராணுவத்தின் எதிர்த்தாக்குதலால் மக்கள்பலர் பலியாகி அதில்மிஞ்சும் எச்சசொச்சமான மக்களைப் புலியில் கட்டாயமாச் சேர்ப்பதுதான் மக்களைப் போராட்டத்துக்கு சேர்க்கும் விதம்.) தாமும் பொருளாதார நடவடிக்கைகளை செய்யவில்லை. மற்ற இயக்கங்களையும் செய்யவிடவில்லை. அடுத்து இந்தியாவிலிருந்து முக்கிய தேவைகளுக்கான பொருட்களைக் கொண்டுவரக்கூடிய நிலமை இருந்தது. அதையும் அவர்களது 'அழிவு' அரசியல், இல்லாமல் செய்துவிட்டது.

'ஆட்டைக்கடித்து, மாட்டைக்கடித்து, ஆளைக் கடிப்பது' போல் என்பார்களே அப்படித்தான் புலிகளின் பயங்கரவாதமும் ஈழப்போராட்டமும் உள்ளது. இவர்கள் சில சிங்கள மக்களை கொன்றதனால் பல தமிழ்பேசும் மக்களைச் சாகடித்து, பின் தாம்தான் தனிக்காட்டு ராஜாவாக இருக்க வேண்டுமென்று மற்ற இயக்கங்கள், அதன் ஆதரவாளர்கள் என்று ஆயிரக் கணக்கானோரை கொன்றுகுதறியபின் தமது சேட்டையை இந்தியாவிலும் விட்டார்கள். சாதாரண இந்தியன், தமிழ்நாட்டுப் பொலிஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர்கள், கடைசியாக ராஜீவ் காந்தியையும் மற்றும் பலபொலிஸ் அதிகாரிகளையும் (15பேர்) கொலை செய்ததன் மூலம் இந்தியாவில் இருந்து எதுவும் கொண்டுவர முடியாத நிலமையை உண்டாக்கியுள்ள புலிகளின் போராட்ட அறிவு எப்படியிருக்கிறது என்பதை புரிந்துகொள்ளுங்கள் ஐபபோ புலகளன ஆதான ஆலோசகர் பாலசிங்கம், புலிகளின் பொருளாதார நெருக்கடியை நீக்க பெரியதோர் அரிய கண்டுபிடிப்பை செய்துள்ளார். அதை அப்படியே கூறினால் 'யாழ் மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட சுயேட்சை பாராளுமன்ற (ஈரோஸ்) உறுப்பினர்கள் பாராளுமன்றம் சென்றால் சில காரியங்கள் செய்யலாம் எனச்சிந்தித்தோம். அதாவது தற்பொழுது நடைபெறும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி தமிழ்பேசும் மக்கள் மீதுள்ள பொருளாதாரத்தடை நீங்குவதற்கு இச்சுயேட்சை உறுப்பினர்கள் பாராளுமன்றம்... செல்வதை அனுமதிக்கலாம்' என்று கூறியுள்ளார்.

பாராளுமன்ற ஜனநாயகத்தால் எதையும் செய்யமுடியாது எனக்கூறி பலமித்த அரசியல் வாதிகளை, துரையப்பா தொடக்கம் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், சாம்தம்பிமுத்து, யோகசங்கரி வரை கொன்று குதறிய புலிகள், போராட்டத்தின் மூலாதாரமான பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த இயக்கங்களை இயங்க தடைசெய்ததோடு பல்லாயிரம் போராளிகளைக் கொன்று குதறிய புலிகள், இப்போது தமக்கு சாப்பாடு கொடுப்பார்களாயின் யாருடன் சண்டையிடுவதாகக் கூறிக்கொண்டார்களோ அந்தப் பேரினவாத அரசின் காலில் (பிரேமதாசாவின் காலில்) விழத்தயாராய் விட்டார்கள்.

**அம்பி – லண்டன்**

★ ★ ★ ★ ★ ★ ★

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

படிப்பகம்

www.padippakam.com



# மனித உரிமை மீறல்கள்.....

வடக்குக்கிழக்கில் நடந்தவற்றை நாம் மிகவும் தெளிவாக புரிந்து கொள்ளவேண்டும். ஒர் அரசியல் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணவேண்டிய நேரத்தில், அவ்வாறு காணப்படாமல் ஆயுதத்தால் அடக்கமுற்பட்டு ஆயிரககணக்கான அப்பாவி இளைஞர்களும் பொதுமக்களும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர். அதன் பின்னர்தான் அங்கு விடுதலை இயக்கங்கள் மேலும்மேலும் வளர்ந்தன. அவ்வியக்கங்களுக்கு ஒத்துழைப்பு கூடியது; ஒத்தாசை கிடைத்தது. ஆகவே நாம் பயங்கரவாதத்தை அழிக்கிறோம் என்ற பெயரில் எந்தவித பிரச்சனையிலும் சம்பந்தமில்லாத பொது மக்களையும், இளைஞர்களையும் அனாவசியமாக துன்புறுத்துவது கூடாது.

நான் அறிந்தவரையிலும், பத்திரிகை செய்கள் மூலமும் திருகோணமலையில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கைது செய்யப்பட்டு, விசாரணைசெய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். இன்னும் நூற்றுக் கணக்கானோர் சிறை முகாம்களில் அடைக்கப்பட்டிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

அது மாத்திரமல்ல தொடர்ச்சியான அடக்குமுறைகள் அங்கு தலைவிரித்து ஆடிவருகின்றன.

இராணுவத்தினரோ, அதிரடிப்படையினரோ வீதியில் இறக்கப்பட்டால், அவர்கள் தமிழர்கள்; சிங்களவர்கள் முஸ்லிம்கள் என்று பார்ப்பதில்லை. அவர்கள் இராணுவத்துக்குரிய குணாம்சத்தையே காட்டுவார்கள். தென்பகுதியில் பல்லாயிரக் கணக்கான சிங்கள இளைஞர்கள் காணாமல் போனார்கள். வடக்கு கிழக்கில் பல்லாயிரக் கணக்கான தமிழ் இளைஞர்கள் காணாமல் போனார்கள். இதே கதி மலையகத்துக்கும் வரக்கூடாது. இப்படியான ஒரு சூழ்நிலை அங்கும் ஏற்படக்கூடாது.

இந்தியாவிலிருந்து அகதிகளைக் கொண்டு வந்து இங்கு மீளக் குடியமர்த்தும் ஒரு காரியம் தொடங்கப் பட்டுள்ளது. அது மிகவும் வரவேற்கப்படவேண்டிய விடயம். ஆனால் இலங்கையிலிருக்கக்கூடிய முக்கியமாக வடக்கு கிழக்கில் இருக்கக்கூடிய பல இலட்சக்கணக்கான அகதிகள் இன்னும் மீளக் குடியமர்த்தப்படாமல். அகதிமுகாம்களில் இருக்கிறார்கள்

அதற்குக் காரணம் என்ன? உண்மையில் இங்கிருக்கக்கூடிய அகதிகளை மீளக்குடியமர்த்தக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்குமாயின் அவர்கள் நிச்சயமாக குடியமர்த்தப்பட்டிருப்பார்கள். ஆனால் அந்தச் சூழ்நிலை இங்கு ஏற்படவில்லை. ஏனெனில் அந்த அகதிகளை குடியமர்த்தக்கூடிய அளவுக்குப் பாதுகாப்புச் சூழ்நிலைகளோ, வசதிவாய்ப்புக்களோ அரசாங்கத்துக்கு இல்லை என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

(மூன்றாம் பக்கத் தொடர்ச்சி.....)

திருகோணமலை ,வவுனியா, மன்னார், மட்டக்களப்பு நகரங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் அகதிகளைக் குடியமர்த்துவதற்கு ஏற்ற வசதி வாய்ப்புகள் உண்டா என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

நாம் அம்பாறையை எடுத்துப் பார்ப்போமாயின், ஒரு தமிழ் கிராமத்தில் கூட அந்த மக்கள் மீளச் சென்று குடியமரவில்லை என்பது புலனாகும். முக்கியமாக வீரமுனை, சொறிக்கல்முனை, மல்வத்தை, மல்லிகைத்தீவு, வலத்தாபட்டி, கோரப்பர்கோயில், சம்மாந்துறை, வீரச்சோலை, பொத்துவில், திராய்கேணி, ஆறாம்கொலனி போன்ற கிராமங்களில் இன்னுமே தமிழ்மக்கள் மீளக்குடியமர்த்தப் படவில்லை.

> இந்தியாவில் அகதி முகாம்களில் இருந்து இந்த மக்கள் எங்கே தற்காலிகமாக அகதிமுகாமில் வைக்கப் பட்டாலும் கூட அவர்கள் பின்னர் தத் தமது சொந்த இடங்களுக்கு அனுப்பப் படுவார்கள் என்று எங்கே கூறப் பட்டது. நகரப் புறங்களைத் தவிர கிராமப் புறங்களிலே இருக்கக் கூடிய மக்களை அங்கே அனுப்ப முடியுமா.

அங்கு அரைகுறையாக இருந்த வீடுகள் கூட. மீண்டும் மீண்டும் கொள்ளையடிக்கப்பட்டும், பொருட்களை கழற்றப்பட்டும் வருகின்றன. ஏன் அவர்களை குடியமர்த்த முடியவில்லை? அதற்கான பாதுகாப்பு இல்லை என்று கூறுகிறார்கள்; அதற்கான வசதி, வாய்ப்புகள் கிடைக்கவில்லை என்று கூறுகின்றார்கள்.

திருகோணமலையில், கிளக்கன்பேர்க் அகதி முகாமில் இன்னும் அகதிகள் இருந்தவண்ணமுள்ளனர். அவர்களை மீளக் குடியமர்த்த முடியவில்லை. அகதி முகாம்களிலிருந்தும் கூட சீருடை தரித்தவர்களாலும், சீருடை தரிக்காதவர்களாலும் இளைஞர்கள் கடத்தி செல்லப் படுகின்றனர். இந்தியாவிலிருந்து வருகின்ற அகதிகளுக்கும் இதேகதிதான் ஏற்படும் என்பதை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். அது மாத்திரமல்ல; இந்தியாவில் அகதி முகாம்களில் இருந்து இந்த மக்கள் இங்கேதற்காலிகமாக அகதிமுகாமில் வைக்கப் பட்டாலும்கூட அவர்கள் பின்னர் தத்தமது சொந்த இடங்களுக்கு அனுப்பப் படுவார்கள் என்று இங்கு கூறப்பட்டது. நகரப் புறங்களைத் தவிர கிராமப் புறங்களிலே இருக்கக் கூடிய மக்களை அங்கே அனுப்ப முடியுமா?

மன்னார், வவுனியா போன்ற இடங்களைச் சேர்ந்த அகதிகள் இந்தியாவிலிருந்து திருகோணமலையில் கொண்டுவந்து இறக்கப்பட்டுள்ளார்கள். திருகோணமலை கொண்டுவரப்பட்ட அகதிகளை மன்னாருக்கு தரை மார்க்கமாகக் கொண்டு செல்லமுடியுமா? உண்மையிலே திருகோணமலைக்கு கொண்டு வரப்பட்ட மன்னார் அகதிகள் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டு, புத்தளம் கொண்டுசெல்லப்பட்டு அங்கிருந்து இலங்கை கடற்படை கப்பல் மூலம் மன்னாருக்கு கொண்டு செல்லக் கூடிய சூழ்நிலை உள்ளது. அதுதான் இந்த நாட்டிலே இன்று இருக்கக் கூடியநிலை. ஆகவே இப்படியான விடயங்களை நாம் கவனத்திற்கு எடுத்து, அவர்கள் உண்மையிலேயே எம்மால் குடியேற்றப் படக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறார்களா என்பதை கவனத்திலெடுத்து அதற்கேற்ற வகையில் செயற்பட வேண்டும்.

'இங்கே சாதாரண நிலை திரும்பி விட்டது; சிவில் நிர்வாகம் நடத்தப்படுகின்றது' என்ற காரணங்களைக் காட்டி மீண்டும் மீண்டும் மக்களை துன்புறுத்தல்களுக்கோ அழிவுகளுக்கோ உட்படுத்தக் கூடாது என்பதுதான் எங்களுடைய கருத்தாகும். உண்மையிலேயே அகதிகள் வருவதையோ அவர்களைக் கொண்டு போய் மீளக்குடியமர்த்துவதையோ நாம் ஒருசதவீதம் தானும் தடுக்கவுமில்லை. எதிர்க்கவும் இல்லை. அவர்கள் மீளக் குடியேற்றப் படுவார்களாயின் நாம் மகிழ்ச்சி அடைவோம்.

ஆனால் அதற்கான சூழ்நிலை உருவாக்கப் படவேண்டும் என்பதுதான் எமது விருப்பமாகும். இங்கு உரையாற்றிய லஷ்மன் ஜெயக்கொடி அவர்கள், தொண்டமான் அவர்களின் பிரேரணையை தாம் முற்றும் முழுதாக எதிர்ப்பதாக கூறினார். ஆளும் கட்சியாக இருந்தாலும்சரி, எதிர்க்கட்சிலே இருக்கக் கூடிய லங்கா சுதந்திரக்கட்சியாக இருந்தாலும் சரி, தமிழ் மக்களின் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான சரியான தீர்மானங்களை முன்வைப்பதற்கு அவர்களுக்கு வக்கில்லை. இன்று இது தொடர்பாக நியமிக்கப்பட்ட தெரிவுகுழுவிலே இருக்கின்ற தமிழ் கட்சிகள் தாம் பெரும்பாலான பிரேரணைகளை முன் வைத்திருக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியோ, லங்கா சுதந்திரக் கட்சியோ எந்தவிதமான பிரேரணைகளையும் முன் வைக்க வில்லை. ஆனால், கௌரவத் தொண்டமான் அவர்களால் வைக்கப்பட்ட பிரேரணைகள் முழு இலங்கையிலுமே விவாதத்துக்கு உட்படுத்தப் பட்டது மாத்திரமின்றி, அதை நாங்கள் முற்று முழுதாக எதிர்க்கிறோம் என்று தெரிவுக்குழுவில் இருக்கக்கூடிய லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் கூறுகிறார்கள். அது லங்கா சுதந்திரக் கட்சியின் கருத்து அல்ல. தனிப்பட்ட சிலரின் கருத்தோ எனக்குத் தெரியாது. ஆனால், அவர்கள் அதைக்கூறினார்கள். ஆனால் இந்த இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு மாறாக எதிர்ப்பதற்கு தான் இந்த நாட்டிலே பல்லாயிரக் கணக்கான மக்கள் இருக்கிறார்கள்.

இந்த இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கு ஏதுவாகக் தகுந்த பிரேரணைகளை முன்வைக்க திராணி உள்ள ஆளும்கட்சியினரோ, எதிர் கட்சியினரோ இல்லாததுதான் மிகப்பெரியகுறையாகும். 45உறுப்பினர்களைக் கொண்ட இந்த தெரிவுக்குழு கூட இந் நிலையிலே போகுமானால் நிச்சயமாக இந்தத் தெரிவுக்குழு கூட இந்தப் பிரச்சனையைத் தீர்க்குமா என்பது கேள்விக்குரிய ஒர் விடையமாகும். நாம் ஒட்டு மொத்தமாக பேச்சுவார்த்தைகளை நடத்தாமல் சமரசமான ஒரு முடிவுக்கு வரமாலேயே 'இதனை முழுமையாக எதிர்க்கிறோம், நிராகரிக்கிறோம்' என்று கூறுவது எந்த விதத்திலும் சரியானதும் அல்ல -நீதியானதும் அல்ல. நியாயமானதும் அல்ல. 'நான் தமிழ்மக்களை எதிர்க்கவில்லை. நான் தீர்வுக்கு எதிரில்லை; ஆனால் தொண்டமானின் பிரேரணையைத்தான் எதிர்க்கிறேன்.' என்று இங்கே இருக்கக் கூடியவர்கள் கூறுகிறார்கள்.

அப்படியானால் அவர்கள் நிச்சயமாக செய்ய வேண்டிய ஒருகடமை இருக்கின்றது. இந்த இனப்பிரச்சனைக்கான தீர்வுக்கான யோசனைகளை முன்வைப்பதுதான் அவர்களின் கடமையாகும். எனவே, இந்த நாட்டில் மீண்டும் மீண்டும் துவேசங்களைப் கிளப்பாமல்-இந்த தெரிவுக்குழுவை கூடச் செல்லாக் காசாக்காமல்-தமிழ்மக்கள் வைத்த யோசனைகளை நீங்கள் திறந்த மனத்துடன் விவாதத்துக்கு எடுத்து, இனப்பிரச்சனையைத் தீர்க்க வழி காண வேண்டும். இல்லையேல் இப்பிரச்சனையைத் தீர்க்கக் கூடிய வகையிலே சரியான யோசனைகளை நீங்கள் முன்வைக்க வேண்டும்.

உண்மையிலே இந்தத் தெரிவுக்குழுவிலே அங்கம் வகிக்கும் பெரும்பான்மையினர் ஆளும் கட்சியையும், எதிர்கட்சியையும் சேர்ந்த சிங்கள உறுப்பினர்கள் தாம். பெரும்பான்மையோரால் வைக்கவேண்டிய பிரேரணைகள் வைக்கப் படவில்லை. சிறுபான்மையோ பல்வேறுபட்ட பிரேரணைகளை முன்வைத்தார்கள். ஆனால், அவற்றை நாம் கலந்தாலோசித்து, 'நல்லது எது கெட்டது எது; கொடுக்கக் கூடியது எது, கொடுக்க முடியாதது எது' என்பதைக் கலந்து பேசுவதை விடுத்து , 'முழுமையாக எதிர்க்கிறோம், கண்டிக்கிறோம்' என்று கூறுவது, நிச்சயமாக இந்த நாட்டின் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்குச் செய்யக்கூடிய ஒரு நல்ல சேவை அல்ல. எனவே இன்னமும் இந்த நாட்டிலே இரத்த ஆறு ஓடவேண்டும் என்று விரும்பினால் இந்த தெரிவுக்குழுவையும் கூட அந்த நிலைக்கு தள்ளி விடுங்கள். இல்லையேல் பிரச்சனை தீர்ந்து இந்த நாட்டில் நல்லதொரு சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்றால் குறைந்த பட்சம் ஏதாவது சில நல்ல யோசனைகளை-முன்வைக்க வேண்டும்.


ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையம்.

EELAM PEOPLES INFORMATION CENTRE

POST BAG - 5551
MADRAS - 600094
INDIA.

B.M. BOX - 1738
LONDON-WCIN-3XX
U. K.

POST FACH - 100206
4600 DORTMUND - 1
GERMANY.

P. BOX 6800
AGINCOURT
ONTARIO M1S3C6
CANADA.

BOITE NO - 69
7 - RUE RACINE
95140 - GARGES
FRANCE.

POST BOKS - 115
GROURD HAGENEN
0905 - OSLO - 9
NORWAY.

POST BOX - 52
LAVERTON
VICTORIA - 3028
AUSTRALIA.


ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரச்சாரச் செய்திப்பிரிவான ஈழ மக்கள் செய்தித்தொடர்பு நிலையத்தின் ஐரோப்பிய பிரிவினால் 'புதியபார்வை' வெளியிடப்படுகிறது.

படிப்பகம்